# WWW.TNPSCPORTAL.IN’S

## TNPSC தேர்வுகளுக்கான

# நடப்பு நிகழ்வுகள் - மே 2021

## INDEX


| தலைப்பு | ப.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| தமிழகம் | 1 | நியமனங்கள் | 50 |
| இந்தியா | 18 | முக்கிய தினங்கள் | 51 |
| வெளிநாட்டு உறவுகள் | 37 | அறிவியல் தொழில் நுட்பம் | 54 |
| சர்வதேச நிகழ்வுகள் | 39 | விளையாட்டுகள் | 58 |
| பொருளாதாரம் | 45 | புத்தகங்கள் | 59 |
| விருதுகள் | 48 | நடப்பு நிகழ்வுகள் வினா-விடைகள் | 61 |


© www.tnpscportal.in

# TNPSC தேர்வுகளுக்கான நடப்பு நிகழ்வுகள் – மே 2021

## தமிழகம்

☞ **தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக வெ.பழனிக்குமார் தமிழக ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.** அவர் அப்பதவியில் பொறுப்பேற்கும் நாளிலிருந்து இரண்டாண்டு காலம் அப்பதவியினை வகிப்பார்.

☞ **தமிழகத்தில் திருக்கோயில்களில் மாத சம்பளமின்றி பணியாற்றும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள்** மற்றும் பிற பணியாளர்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்கும் வகையில் **உதவித் தொகை ரூ. 4,000**, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகை மளிகைப் பொருட்கள் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

☞ **கரோனா சிகிச்சைக்கான தடுப்பூசி உட்பட இதர சிகிச்சை பொருள்களுக்கு சில மாதங்களுக்கு வரி விலக்கு அளிக்க, தமிழக அரசு சார்பில் 43 வது ஜி.எஸ்.டி. கவுண்சில் கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது**. (தற்போது, குறிப்பாக கொரோனா தடுப்பூசிக்கு 5 சதவீத ஜி.எஸ்.டி. விதிக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது). ஜிஎஸ்டி கட்டமைப்பை மாற்றாவிட்டால் கடும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார். தமிழகத்திற்கு ரூ12,000 கோடிக்கு மேல் ஜிஎஸ்டி நிலுவைத்தொகை மத்திய அரசிடமிருந்து வரவேண்டியுள்ளதாகவும், ஜிஎஸ்டி கவுன்சிலில் ஒரு மாநிலத்திற்கு ஒரு வாக்கு என்ற நடைமுறை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

☞ 30-05-2021 **அன்று , தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோவை இஎஸ்ஐ மருத்துவமனையில் பாதுகாப்பு உடை அணிந்து கரோனா நோயாளிகளை நேரில் சந்தித்து அவர்களின் உடல்நலம் குறித்து கேட்டறிந்தார்**. இந்தியாவிலேயே, இவ்வாறு பாதுகாப்பு உடை அணிந்து கரோனா வார்டுக்குள் சென்ற முதல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்பது குறிப்பிடத்தக்கது.

☞ **அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் மு.ஆனந்தகிருஷ்ணன் காலமானார்.** கான்பூர் இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் முன்னாள் தலைவராகவும் பணியாற்றிய இவர், **தமிழ்நாடு பாடத்திட்ட திருத்தக் குழுவின் தலைவராகவும் இருந்துள்ளார்.**

இவர், அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் பதவி வகித்த போது, பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை எளிதாக்கிய ஒற்றைச் சாளர முறையை நடைமுறைக்குக் கொண்டுவரக் காரணமாக இருந்தவர். **நாட்டில் முதன்முறையாக செமஸ்டர் கல்வி முறையை கொண்டு வந்தவர்.**

ஆனந்தகிருஷ்ணனுக்கு 2002-ஆம் ஆண்டில் இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது வழங்கி சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

☞ **காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மற்றும் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர் காளியண்ணன் கவுண்டர் (101) கொரோனா தொற்று காரணமாக 28-5-2021 அன்று காலமானார்.**

திருச்செங்கோடு அருகே குமரமங்கலத்தைச் சேர்ந்த முத்துநல்லிக்கவுண்டர், பாப்பாயம்மாள் ஆகியோருக்கு 1921 ஜன.10-ஆம் தேதி மகனாக பிறந்தார்.

காளியண்ணன் கவுண்டர் தனது 19-வது வயதில் இந்திய தேசிய காங்கிரசில் தன்னை இணைத்துக் கொண்டார். 1942-ம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றார். தனது 28-வது வயதில் இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இந்தியாவின் முதல் நாடாளுமன்றத்தில் (1950-52) உறுப்பினராக இருந்தார். இவர் ராசிபுரம் தொகுதியில் ஒரு முறையும் (1952), திருச்செங்கோடு தொகுதியில் 2 முறையும் (1957, 1962) எம்.எல்.ஏ.வாக தேர்வு செய்யப்பட்டார். எம்.எல்.சி. யாகவும் பதவி வகித்து உள்ளார்.

1948-ஆம் ஆண்டு மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்படாத சூழலில், சென்னை மாகாணத்தில் இருந்து அப்போதைய மக்களவைக்கு, அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களாக 40 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவராக டி.எம்.காளியண்ணனும் தேர்வானார்.

பெரும் தலைவர்கள் இவரை ‘அரசியல் யாத்திரிகன்’ என செல்லமாக அழைப்பதும் உண்டு.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் துணை தலைவர், பொருளாளர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளையும் அலங்கரித்து உள்ளார். இவர் 1954 முதல் 1957 வரை ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தின் ஜில்லா போர்டு தலைவராக இருந்த போது, 2 ஆயிரம்பள்ளிக்கூடங்களை திறந்து வைத்த பெருமைக்கு சொந்தக்காரராக திகழ்ந்தார்.

இவர் தனது நிலத்தில் பெரும்பகுதியை ஏழை - எளியவர்களுக்கு வழங்கி உள்ளதுடன், பள்ளிக்கூடங்கள் திறப்பதற்காகவும் தனது நிலத்தை அதிக அளவில் தானமாக வழங்கி உள்ளார். பெண் கல்வி, பெண்களின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட இவர் 1954 முதல் அவ்வை கல்வி நிலையம் என்ற இலவச பள்ளியை திருச்செங்கோட்டில் நடத்தி வந்துள்ளார்.

☞ **கரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் முன்களப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது**. அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

கரோனா தொற்று காலத்தில், மருத்துவமனைகளில் நேரடியாக நோயாளிகளுடன் தொடர்பில் உள்ள பணிகளில் ஈடுபட்டு வரும் முன்களப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, அலோபதி மற்றும் இந்திய முறை மருத்துவர்களுக்கு ரூ. 30 ஆயிரம் வழங்கப்படும். முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கு ரூ.20 ஆயிரமும், பயிற்சி மருத்துவர்களுக்கு ரூ.15 ஆயிரமும் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

மேலும், செவிலியர்களுக்கு ரூ. 20 ஆயிரம்; கிராமப்புற சுகாதார செவிலியர்கள், 108 ஆம்புலன்ஸ் பணியாளர்கள், அமரர் ஊர்தி பணியாளர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் அவர்களுக்கு இணையான பணியாளர்கள் உள்ளிட்டோருக்கு ரூ.15 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என அந்த அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞ **குமரி மாவட்டத்தில் கனமழையால் சேதமடைந்த வீடுகளுக்கு தலா ரூ.5000 நிவாரணம் வழங்கப்படும் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்**.இதன்படி முழுவதும் சேதமடைந்த கூரை வீட்டிற்கு தலா 5,000 ரூபாயும், அதேபோல் பகுதியளவில் சேதமடைந்த கூரை வீடுகளுக்கு தலா 4,100 ரூபாயும், நெற்பயிர் சேதம் - ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணமும், பிற பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணமாக வழங்கப்படும் என தமிழக முதல்-அமைச்சர் அறிவித்துள்ளார்.

☞ **கொரோனா வைரஸ் பாதிப்பால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு தமிழக அரசு சார்பில் தலா ரூ.5 லட்சம் வைப்புத்தொகையாக வழங்கப்படும் என்று முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் அறிவித்துள்ளார்**.அதன் படி, ஆதரவற்ற குழந்தைகளைப் பாதுகாக்கும் வகையில், 9 வகையான நிவாரண உதவிகள் அளிக்கப்பட உள்ளன. (நன்றி தினமணி)

1. கரோனா நோய்த் தொற்றால் பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றித் தவிக்கும் குழந்தைகளுக்கு அவர்களது பெயரில் தலா ரூ.5 லட்சம் வைப்பீடு செய்யப்படும். அந்தக் குழந்தை 18 வயதை நிறைவடையும் போது அந்தத் தொகை குழந்தைக்கு வட்டியோடு அளிக்கப்படும்.

2. பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு அரசு இல்லங்கள் மற்றும் விடுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தங்குவதற்கு இடம் அளிக்கப்படும்.

3. குழந்தைகளின் பட்டப் படிப்பு வரையிலான கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்கள் உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் அரசே ஏற்கும்.

4. கரோனா நோய்த் தொற்றால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.3 லட்சம் அளிக்கப்படும்.

5. அரசு காப்பகம் அல்லது விடுதிகளில் இல்லாமல், உறவினர், பாதுகாவலரின் ஆதரவில் வளரும் குழந்தைகளின் பராமரிப்புச் செலவாக, மாதந்தோறும் தலா ரூ.3,000 உதவித் தொகை அளிக்கப்படும். இந்தத் தொகை குழந்தைகள் 18 வயது நிறைவடையும் வரையில் அவர்களுக்குக் கிடைக்கும்.

6. ஏற்கெனவே தாய் அல்லது தந்தையை இழந்து, இப்போது கரோனா நோய்த் தொற்றால் மற்றொரு பெற்றோரையும் இழந்த குழந்தைகளுக்கும் ரூ.5 லட்சம் வைப்பீடு செய்யப்படும்.

7. ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படும் உதவித் தொகை, அவர்களது கல்வி மற்றும் வளர்ச்சியும் சிறப்புக் குழுவால் மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்படும்.

8. அனைத்து அரசு நலத் திட்டங்களும் முன்னுரிமை அடிப்படையில் குழந்தைகளுக்கும், நோய்த் தொற்றினால் கணவன் அல்லது மனைவியை இழந்து, குழந்தையுடன் இருக்கும் பெற்றோருக்கும் அளிக்கப்படும்.

9. இந்த நிவாரண உதவிகள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்றவாறு வழங்குவது குறித்த வழிகாட்டி நெறிமுறைகள் வகுத்து வெளியிட நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில் வழிகாட்டுதல் குழு அமைக்கப்படும். இந்தக் குழுவில் சமூக நலத் துறை செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருப்பர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

☞ **முதல்-அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஆக்சிஜன் செறிவூட்டிகள் மற்றும் மருத்துவ கருவிகளை வாங்குவதற்கு 41.40 கோடி ரூபாயினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒதுக்கீடு** செய்துள்ளார்.

☞ **கேரளத்தில் இலக்கியத்துக்கான உயர்ந்த தேசிய விருதாக வழங்கப்படும் ஓ.என்.வி. இலக்கிய விருது இந்த ஆண்டு (2021) கவிஞர் வைரமுத்துவுக்கு அறிவிக்கப்பட்டது**. மலையாளி அல்லாத ஒருவருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். மலையாளப் பெருங்கவிஞர்களுள் ஒருவர் ஓ.என்.வி குறுப் நினைவாக 2017-ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

**குறிப்பு.** : இந்த விருதை மறுபரிசீலனை செய்வதாக விருது வழங்கும் அமைப்பு அறிவித்ததைத் தொடர்ந்து, கவிஞர் வைரமுத்து அவர்கள் இவ்விருதை திருப்பி வழங்குவதாக அறிவித்துள்ளார்.

☞ **மீன்பிடித் தடைக்கால நிவாரணமாக 1.72 லட்சம் மீனவ குடும்பங்களுக்கு தலா ரூ.5 ,000 மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை அளிக்கப்படும்** என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

☞ **'பெல்லோ சிட்டிசன்'** (சக மனிதர்கள் மேன்மை அமைப்பு) என்ற பெயரில் தொண்டு நிறுவனத்தை 'தந்தி' டி.வி. இயக்குனர் பா.ஆதவன் ஆதித்தன், சுற்றுச்சூழல் ஆர்வலர் அருண் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தொடங்கியுள்ளார்.

☞ **தமிழகத்தில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வாடகை முறையில் டிராக்டர்கள் பயன்படுத்த அளிக்கும் திட்டத்தை டஃபே நிறுவனம் அறிவித்துள்ளது**.தமிழக அரசின் உழவன் செயலியில் உள்ள ஜேஃபார்ம் சர்வீஸ் செயல்தளம் வழியாக டிராக்டர்களையும் உபகரணங்களையும் வாடகைக்கு எடுக்கலாம். தமிழக அரசின் வேளாண்துறை ஆதரவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

☞ **பிரபல தனியார் ஆய்வகமான மெட் ஆல் - கொரோனா பரிசோதனை உரிமத்தை ரத்து செய்து சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.**

☞ **தூத்துக்குடி மாவட்டம் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடந்த போராட்டங்களில் ஈடுபட்டோர் மீது தொடரப்பட்ட வழக்குகள் வாபஸ்** பெறப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் 21-5-2021 அன்று அறிவித்துள்ளார்.

☞ **சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் நடமாடும் உழவர் சந்தை திட்டம்** 21-5-2021 அன்று தொடங்கப்பட்டது.

☞ **தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டில் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அரசுப் பணி நியமன ஆணையை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்**.

**கூ.தக.** : கடந்த 2018ஆம் ஆண்டு மே22 ஆம் தேதி தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் எதிராக போராடியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்த சம்பவத்தில் போலீசார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர்.

☞ **தமிழகத்தில் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு கரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருப்பூரில் 20-5-2021 அன்று தொடங்கிவைத்தார்.**

☞ **தமிழகத்தில் ஆக்சிஜன் வினியோகத்தை கண்காணிக்க ஐ.ஏ.எஸ். அதிகாரி டாரஸ் அகமது தலைமையில் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.**

**கூ.தக.** : சுப்ரீம் கோர்ட்டு கடந்த 6-ந் தேதியன்று சிறப்பு விடுப்பு மனு மீது பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், மாநிலங்களுக்கு மருத்துவ ஆக்சிஜன் ஒதுக்கீடு மற்றும் வினியோகம் தொடர்பான தேசிய அளவிலான பணிக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆக்சிஜன் வினியோகம் தொடர்பான மாநில அளவில் துணைக்குழுக்களை நியமிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.இந்த துணைக்குழுவில் மாநிலத்தில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரி இடம் பெறுவார்.

☞ **'கொரோனா தேவி' சிலை காமாட்சிபுரி ஆதினம் சார்பில் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளது.**

☞ **தமிழ்நாடு மின்வாரிய தலைவராக, ஐ.ஏ.எஸ்., அதிகாரி ராஜேஷ் லக்கானி** நியமிக்கப்பட்டு உள்ளார்.

☞ **பள்ளி கல்வி இயக்குனர் பணியிடத்தை பள்ளி கல்வி கமிஷனராக தரம் உயர்த்தி, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது**. இதன் மூலம், பள்ளி கல்வி இயக்குனரின் பொறுப்புகள் பள்ளி கல்வி கமிஷனராக உள்ள ஐ.ஏ.எஸ்., அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளன. **பள்ளி கல்வி கமிஷனர் பொறுப்பிற்கு திரு. நந்தகுமார் ஐ.ஏ.எஸ்., நியமிக்கப்பட்டுள்ளார்.**

☞ **காஞ்சிபுரம் மாவட்டம் உத்தரமேரூர் அருகேயுள்ள உள்ளம்பாக்கம் இருளர் குடியிருப்பு பகுதியில் செவ்வாய்க்கிழமை 1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல்லவர் கால மூத்ததேவி சிலை ஒன்றை உத்தரமேரூர் வரலாற்று ஆய்வு மையத்தினர் கண்டுபிடித்துள்ளனர்**. இது 1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல்லவர் காலத்தை சேர்ந்த ஜேஷ்டாதேவி சிலையாகும். இச்சிலையின் வலப்பக்கத்தில் மாட்டுத்தலை போன்ற வடிவில் அவரது மகன் மாந்தனும், இடப்பக்கம் மகள் மாந்தியும் காணப்படுகின்றனர். தலைக்கு மேலே காக்கை சின்னம் உள்ளது.

☞ **'ஆவின்' பால் லிட்டருக்கு ரூ.3 விலை குறைப்பு நடவடிக்கை 16-5-2021 அன்று முதல் அமலுக்கு வந்துள்ளது.** குறைக்கப்பட்ட 'ஆவின்' பால் விலை குறித்த முழு விவரம் வருமாறு:-

☞ ஆவின்பால் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 3 குறைக்கப்பட்டுள்ளநிலையில், அதன்விலைப் பட்டியலை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

1. ஆவின் நீல நிறம் (சமன்படுத்தப்பட்டபால்) 1 லிட்டர் - ரூ.40

2. ஆவின் நீல நிறம் (சமன்படுத்தப்பட்டபால்) அரைலிட்டர் - ரூ.20

3. ஆவின் பச்சை பால் (நிலைப்படுத்தப்பட்ட பால்) அரைலிட்டர் - ரூ.22

4. ஆவின் ஆரஞ்ச் (நிறை கொழுப்பு பால்) அரைலிட்டர் - ரூ.24

5. இளஞ்சிவப்பு பால்( இருமுறை சமன்படுத்தப்பட்டபால்) அரை லிட்டர்- ரூ.18.50

6. டீமேட் ஒரு லிட்டர் - ரூ.57

☞ **தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஆலோசனை வழங்குவதற்காக, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, சட்டப்பேரவையில் இடம்பெற்றுள்ள 13 கட்சிகளின் உறுப்பினர்களைக் கொண்ட அனைத்துக் கட்சி ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது**. இந்த குழுவின் உறுப்பினர்களின் விவரம் வருமாறு,

1.திமுக - மருத்துவர் நா.எழிலன்

2.அதிமுக - மருத்துவர் சி.விஜய பாஸ்கர்

3.காங்கிரஸ் - ஏ.எம்.முனிரத்தினம்

4.பாமக - ஜி.கே.மணி

5.பாஜக - நயினார் நாகேந்திரன்

6.மதிமுக - தி.சதன் திருமலைக்குமார்

7.விசிக - எஸ்.எஸ்.பாலாஜி

8.மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி - வி.பி.நாகை மாலி

9.இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - தி.ராமசந்திரன்

10.மமக - ஜவாஹிருல்லா

11.கொ.ம.தே.க - ரா.ஈஸ்வரன்

12.தமிழக வாழ்வுரிமை கட்சி - தி.வேல்முருகன்

13.புரட்சி பாரதம் - பூவை ஜெகன் மூர்த்தி

☛ **சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் கி.ரா. என அழைக்கப்படும் கி.ராஜநாராயணன் (98) வயது மூப்பின் காரணமாக, புதுச்சேரியில் 17-5-2021 அன்று காலமானார்.** அவருடைய உடல் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகேயுள்ள இடைசெவல் கிராமத்தில் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அவர் பிறந்த ஊரான இடைசெவலுக்கு அருகிலுள்ள கோவில்பட்டி நகரில் அவருக்கு சிலை வைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

**கி.ராஜநாராயணன் பற்றி** : (நன்றி:தினமணி)

தற்போதைய தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகேயுள்ள இடைச்செவல் கிராமத்தில் 1922-ஆம் ஆண்டில் பிறந்தவர் கி.ராஜநாராயணன். ராயங்கல ஸ்ரீ கிருஷ்ணராஜ நாராயண பெருமாள் ராமானுஜம் என்பது முழுப்பெயர். இதைச் சுருக்கி, கி.ராஜநாராயணன் என்று வைத்துக் கொண்டார்.

ஏழாம் வகுப்பு வரை மட்டுமே பயின்ற இவர், விவசாயத்தில் ஈடுபட்டார். நாற்பது வயதுக்கு மேல் எழுதத் தொடங்கினார். இவரது முதல் சிறுகதையான 'மாயமான்' 1958-இல் 'சரஸ்வதி' இதழில் வெளியானது. அது வாசகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றால், தொடர்ந்து பல சிறுகதைகளை எழுதி வந்தார்.

கரிசல் வட்டார அகராதியை உருவாக்கி, வட்டார மொழிக்கு அகராதி உருவாக்கிய முன்னோடி என்ற பெருமைக்குரியவர். **'கோபல்லபுரத்து மக்கள்' நாவலுக்காக 1991-இல் சாகித்ய அகாதெமி விருது பெற்றார்.**

இவரது எழுத்துகள் கரிசல் பூமி மக்களின் வாழ்க்கை, துன்பங்கள், நம்பிக்கைகள், ஏமாற்றங்களை விவரித்ததால் 'கரிசல் இலக்கியத்தின் தந்தை' எனப் போற்றப்பட்டார்.

வாய்மொழிக் கதை சொல்லும் மரபின் கூறுகளை தனது படைப்பின் அடிப்படை அம்சங்களாகக் கொண்டிருந்தார். வட்டார வாய்மொழி மரபு, செவ்விலக்கியக் கூறுகள், நேரடியான இதழியல் நடை ஆகிய மூன்று கூறுகளையும் கலந்து, தனக்கென தனி நடையை உருவாக்கினார்.

இவரது கதைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு 944 பக்கங்கள் கொண்ட 'நாட்டுப்புறக்கதைக் களஞ்சியம்' என்ற படைப்பாக 2007-இல் வெளியானது. இவரது சில கதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. 'கிடை' என்ற இவரது குறுநாவல் 'ஒருத்தி' என்ற திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டது.

'கோமதி', 'கண்ணீர்', 'கரிசல் கதைகள்', 'கி.ரா.பக்கங்கள்', 'கிராமியக் கதைகள்', 'கொத்தைபருத்தி', 'புதுவை வட்டார நாட்டுப்புறக் கதைகள்', 'கோபல்ல கிராமம்', 'புதுமைப்பித்தன்', 'மாமலை ஜீவா' ஆகியவை இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை.

'வட்டார இலக்கியத்தின் முன்னத்தி ஏர்', 'தமிழ் எழுத்துலகின் பீஷ்மர்', 'தலைசிறந்த கதைசொல்லி' என்றெல்லாம் போற்றப்பட்டவர்.

தனது படைப்புகளின் உரிமை முதலில் தனது வாசகர் புதுவை இளவேனிலுக்கும், இரு மகன்களுக்கும் கி.ரா. அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

☞ **சென்னை மாநகராட்சியின் புதிய ஆணையராக ககன்தீப் சிங் பேடி நியமனம்** செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

☞ **தமிழகத்தில் 3.5 கோடி தடுப்பூசிகளை கொள்முதல் செய்வதற்கான உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகளை தமிழக அரசு கோரியுள்ளது.** இந்த ஒப்பந்தப் புள்ளியானது, தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் 1998-இன் கீழ் கோரப்பட்டுள்ளது.

☞ **தமிழக சுகாதாரத் துறையின் சிறப்புப் பணி அதிகாரியாக பி.செந்தில்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்**.

☞ **தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்று தமிழகத்துக்கான ஆக்சிஜன் ஒதுக்கீட்டை 220 மெட்ரிக் டன்னில் இருந்து 419 டன்னாக அதிகரித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.**

☞ **தமிழக சட்டப்பேரவை அவை முன்னவராக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.** தமிழக சட்டப்பேரவையில் அவை முன்னவர் முக்கிய பொறுப்பாக கருதப்படுகிறது. ஒவ்வொரு தீர்மானமும் கொண்டுவரப்படும் போது அவை முன்னவர்தான் அதனை முன்மொழிவார் என்பது குறிப்பிடத்தக்கது.

☞ **தமிழகத்தில் ஆக்ஸிஜன் விநியோகத்தை முறைப்படுத்த 4 பேர் கொண்ட குழுவை தமிழக சுகாதாரத்துறை அமைத்துள்ளது**. தொழிற்துறை செயலாளர் முருகாநந்தம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த குழுவில், சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், சுகாதாரத்துறை சிறப்பு அதிகரி செந்தில் குமார் உள்ளிட்டேர்ர் இடம்பெற்றுள்ளனர்.

☞ **தமிழக அரசின் தலைமைச் செயலாளராக திரு.வெ.இறையன்பு நியமிக்கப்பட்டுள்ளார்**.

☞ **மருத்துவப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை அறிவிப்பு** : கரோனா தொற்றின் இரண்டாம் அலைக் காலமான, ஏப்ரல், மே, ஜூன்-மூன்று மாத காலத்திற்கு, மருத்துவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாயும், செவிலியர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும், இதரப் பணியாளர்களுக்கு 15 ஆயிரம் ரூபாயும், பட்ட மேற்படிப்பு மருத்துவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

☞ **தமிழகத்தின் 16-வது சட்டப்பேரவையின் சபாநாயகராக ராதாபுரம் எம்எல்ஏ மு.அப்பாவு** (1952 க்கு பின்னர் 20 வது சபாநாயகராக) மற்றும் துணை சபாநாயகராக கீழ்பென்னாத்தூர் திமுக எம்எல்ஏ கு.பிச்சாண்டி அவர்களும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**கூ.தக. :**

தமிழகத்தில் 1952-ல் சட்டப்பேரவை அமைந்ததில் இருந்து இதுவரை 19 பேரவைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியுள்ளனர். தற்போது20-வது பேரவைத் தலைவராக அப்பாவு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

தமிழக சட்டப்பேரவைக்கு சிறந்த தலைவர்களை தந்த வரலாறும், பெருமையும் திருநெல்வேலி சீமைக்கு உண்டு. (நன்றி: தி இந்து)

தமிழகத்தில் காங்கிரஸ்ஆட்சிக் காலத்தில் முதல்வராக காமராஜர் இருந்தபோது 1962 முதல் 1967 வரை சட்டப்பேரவைத் தலைவராக இருந்த செல்லபாண்டியன் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்.

அதன் பின்பு, திமுக ஆட்சியில் முதல்வராக அண்ணாபதவி வகித்தபோது 1967 முதல் 1968 வரையில் சட்டப்பேரவைத் தலைவராக சி.பா.ஆதித்தனார் பொறுப்பு வகித்தார். திருநெல்வேலியில் இருந்து பிரிந்த தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர்.

1985 முதல் 1989 வரையில் அதிமுக ஆட்சியில் எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது பேரவைத் தலைவராக திருநெல்வேலியைச் சேர்ந்த பி.எச்.பாண்டியன் கோலோச்சினார்.

2006 முதல் 2011 வரை தமிழகத்தில் திமுக ஆட்சியில் கருணாநிதி முதல்வராக இருந்தபோது சட்டப்பேரவைத் தலைவராக பணியாற்றியவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இரா.ஆவுடையப்பன். இந்த வரிசையில் தற்போது திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மு.அப்பாவு தமிழக பேரவைத் தலைவராகியுள்ளார்.

**☞ தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள 4 தனிச் செயலாளர்கள் கவனிக்க வேண்டிய துறைகளை ஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.**

உதயச்சந்திரன் ஐஏஎஸ் ((முதல்வரின் முதன்மைச் செயலாளர் - 1)

1. பொது (ஐஏஎஸ் உள்ளிட்ட அனைத்தும்),2. லஞ்ச ஒழிப்பு ஆணையம்,3. தகவல் தொழில்நுட்பம்,4. உள்துறை (ஐபிஎஸ் உள்ளிட்ட அனைத்தும்),5. கலால் துறை,6. உயர் கல்வித்துறை,7. பள்ளிக் கல்வித்துறை,8. சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை,9. தொழில்துறை,10. திட்டம் மற்றும் வளர்ச்சி, 11. அறநிலையத்துறை

உமாநாத் ஐஏஎஸ் (தனிச் செயலாளர் - 2)

1. ஆற்றல்,2. உணவு,3. சிறப்பு முயற்சி,4. மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை,5. போக்குவரத்து,6. வணிகவரி மற்றும் பதிவுத்துறை,7. உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் நீர் விநியோகம்,8. பொதுப்பணி (கட்டிடம்),9. நெடுஞ்சாலை மற்றும் துறைமுகம்,10. நீர் வளம்,11. நிதி

சண்முகம் ஐஏஎஸ் (தனிச் செயலாளர் - 3)

1. மனிதவளம்,2. கூட்டுறவு,3. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை,4. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி,5. சட்டப்பேரவை,6. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ்,7. தமிழ் வளர்ச்சி மற்றும் தகவல்,8. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு,9. விவசாயம் - உழவர் நலத்துறை,10. சட்டம்,11. முதல்வர் அலுவலகம் சம்பந்தப்பட்ட நிர்வாகம்

அனு ஜார்ஜ் ஐஏஎஸ் (தனிச் செயலாளர்- 4)

1. சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றம் மற்றும் காடுகள்,2. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலன்,3. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்,4. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு,5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்,6. சமூக நலத்துறை மற்றும் மகளிர் மேம்பாடு,7. கால்நடைத்துறை, பால் வளத்துறை, மீன்வளத்துறை - மீனவர்கள் நலன்,8. கைத்தறி, கைவினைப் பொருட்கள், டெக்ஸ்டைல், காதி,9. சுற்றுலா - கலாச்சாரம்,10. சமூகச் சீர்திருத்தம்,11. மாற்றுத்திறனாளிகள் நலன்,12. முதல்வர் அலுவல்கள் (அரசியல் அல்லாத)/ சுற்றுப் பயணங்களை நிர்வகித்தல்/அரசு நெறிமுறைகளை நிர்வகித்தல்".

☛ **சென்னை, ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் ஏழை, எளியோர் பயன்பெறும் வகையில் ஊரடங்கு முடியும் வரையில் 24 மணி நேரமும் இலவச உணவு வழங்கும் திட்டத்தை** இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு 11-5-2021 அன்று தொடங்கி வைத்தார்.

☛ **மாநிலங்களவை உறுப்பினர் பதவியை அதிமுகவின் கே.பி.முனுசாமி, வைத்திலிங்கம் ஆகியோர் ராஜினாமா செய்துள்ளனர்**.சட்டப்பேரவைத் தேர்தலில், கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி தொகுதியில் அ.தி.மு.க சார்பில் போட்டியிட்ட கே.பி.முனுசாமியும், தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தொகுதியில் போட்யிட்ட வைத்திலிங்கமும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இந்த முடிவை எடுத்துள்ளனர்.

☛ **தமிழக அரசின் புதிய தலைமை வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் சண்முகசுந்தரத்தை நியமித்து ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உத்தரவு** பிறப்பித்துள்ளார்.

☛ **தமிழகத்தின் 16-வது சட்டப்பேரவையின் தற்காலிக சபாநாயகராக கீழ்பென்னாத்தூர் திமுக எம்எல்ஏ கு.பிச்சாண்டி** நியமிக்கப்பட்டார்.

☛ **ஆக்ஸிஜன் உற்பத்திக்கு தமிழகத்தில் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு 30 சதவிகித மூலதன மானியம் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.** மூலதன சலுகையைப் பெற ஆக்ஸ்ட் 15-ம் தேதிக்குள் உற்பத்தியைத் தொடங்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

☞ **தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட ஒருநபர் விசாரணை ஆணையத்தின் தலைவர் அருணா ஜெகதீசன், 14-5-202021 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் விசாரணையின் இடைக்கால அறிக்கையைத் தாக்கல் செய்தார்.**

**கூ.தக.** : தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடக்கோரி 2018, மே 22 அன்று பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி, பேரணியாகச் சென்ற போது நடைபெற்ற கலவரத்தில், போலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் தடியடியின்போது, 2 பெண்கள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, வன்முறை குறித்து விசாரிக்க உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில், முந்தைய எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அரசு ஒருநபர் விசாரணை ஆணையம் அமைத்தது. 2018 ஜூன் 4 அன்று விசாரணை ஆணையம் விசாரணையைத் தொடங்கியது.

☞ **தமிழக முதல்வராக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கையெழுத்திட்ட ஐந்து கோப்புகள்.**

1. முதல் அரசாணையாக கரோனா நிவாரணமாக குடும்ப அட்டை ஒன்றுக்கு கருணாநிதி பிறந்த நாளில் ரூ.4000 என அறிவிக்கப்பட்டிருந்தது. அதை முதல் தவணையாக மே மாதத்திலேயே ரூ.2000-ஐ குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் அரசாணை. இதன்படி 2 கோடியே, 7 லட்சத்து 66,000 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவர்.

2. ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்படுகிறது. அது மே 2021 மாதம் 16ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

3. மகளிர், பணிக்குச் செல்லும் பெண்கள், படிக்கும் பெண்கள் இலவசமாக பேருந்தில் பயணம் செய்யும் திட்டம் நாளை முதல் அமல்.

4. உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்கிற திட்டத்தின் கீழ் தேர்தல் பிரச்சாரத்தின்போது பெறப்பட்ட மனுக்களை 100 நாட்களில் தீர்வு காண உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்கிற திட்டத்தின் கீழ் துறை உருவாக்கப்படுகிறது. இதற்காக ஐஏஎஸ் அந்தஸ்து அதிகாரி நியமிக்கப்படுகிறார்.

5. கரோனா சிகிச்சை பெறுவோர் அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாலும் முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சை செலவுகளை அரசே வழங்கும்.

☞ **முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அமைச்சரவையின் முதல் கூட்டம் 9-5-2021 அன்று** நடைபெற்றது.

☞ **16-ஆவது சட்டப் பேரவையின் தற்காலிகத் தலைவராக கீழ்பெண்ணத்தூர் தொகுதியில் வெற்றி பெற்ற கு.பிச்சாண்டி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.** அவர் புதிய உறுப்பினர்களுக்கு பதவியேற்பு உறுதிமொழி செய்து வைத்தார்.

☞ **ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில், 24 மணி நேரமும் இலவசமாக உணவு வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிமும்** செய்துள்ளது.

☞ **தமிழக எதிர்க்கட்சித் தலைவராக எடப்பாடி கே.பழனிசாமி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

☞ **தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக சண்முகசுந்தரம்** நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

☞ **சென்னை மாநகராட்சி ஆணையராக ககன்தீப் சிங் பேடி** நியமனம் செய்யப்பட்டார்.

☞ **தமிழகத்தின் முதல்வராக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 7-5-2021 அன்று பொறுப்பேற்றார். திரு.மு.க.ஸ்டாலினுடன் சேர்த்து 33 அமைச்சர்கள் பொறுப்பேற்றனர்.** தமிழகத்தின் புதிய அமைச்சரவை விவரம் வருமாறு,

1 மாண்புமிகு திரு. மு.க.ஸ்டாலின், முதலமைச்சர் - பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள்துறை, சிறப்பு முயற்சி, சிறப்புத் திட்ட செயலாக்கம், மாற்றுத் திறனாளிகள் நலன்

2 மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர் - சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுசீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

3 மாண்புமிகு திரு. கே.என்.நேரு, நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் - நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி, - குடிநீர் வழங்கல்

4 மாண்புமிகு திரு. இ.பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் - கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

5 மாண்புமிகு திரு. க.பொன்முடி, உயர்கல்வித் துறை அமைச்சர் - உயர்கல்வி உள்ளிட்ட தொழிற்கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்

6 மாண்புமிகு திரு. எ.வ.வேலு, பொதுப்பணித் துறை அமைச்சர் - பொதுப்பணிகள் (கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்)

7 மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் - வேளாண்மை, வேளாண்மை பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவு- சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

8 மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், வருவாய்த் துறை மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை அமைச்சர் - வருவாய், மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை

9 மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில்துறை அமைச்சர் - தொழில்துறை, தமிழ் ஆட்சி மொழி - மற்றும் பல தமிழ்ப் பண்பாட்டுத் துறை, தொல்பொருள்

10 மாண்புமிகு திரு. எஸ்.இரகுபதி, சட்டத் துறை அமைச்சர் - சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்

11 மாண்புமிகு திரு. சு.முத்துசாமி, வீட்டு வசதித்துறை அமைச்சர் - வீட்டுவசதி, ஊரக வீட்டுவசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இடவசதி கட்டுப்பாடு நகரத்திட்டமிடல் நகர் பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்

12 மாண்புமிகு திரு. கே.ஆர்.பெரியகருப்பன், ஊரக வளர்ச்சி துறைத் அமைச்சர் -ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள்

13 மாண்புமிகு திரு. தா.மோ.அன்பரசன், ஊரகத் தொழிற் துறை அமைச்சர் - ஊரகத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் உட்பட சிறு தொழில்கள், குடிசை மாற்று வாரியம்

14 மாண்புமிகு திரு. மு.பெ.சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்- செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் - தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்

15 மாண்புமிகு திருமதி. பி.கீதா ஜீவன், சமூக நலன்- மகளிர் உரிமைத் துறை அமைச்சர்- மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

16 மாண்புமிகு திரு. அனிதா - ஆர்.ராதாகிருஷ்ணன், மீன்வளம்- மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பாரமரிப்புத் துறை அமைச்சர்- மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம் கால்நடை பராமரிப்பு

17 மாண்புமிகு திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர் - போக்குவரத்து, நாட்டுடமையாக்கப்பட்ட மற்றும் இயக்கூர்தி சட்டம்

18 மாண்புமிகு திரு. கா.ராமச்சந்திரன், வனத்துறை அமைச்சர் - வனம்

19 மாண்புமிகு திரு. அர.சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் - உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு

20 மாண்புமிகு திரு. வி.செந்தில் பாலாஜி , மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்- மின்சாரம், மரபு சாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)

21 மாண்புமிகு திரு. ஆர்.காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல், கதர் அமைச்சர்- கைத்தறி மற்றும் துணிநூல், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூதானம் மற்றும் கிராம தானம்

22 மாண்புமிகு திரு. மா.சுப்பிரமணியன்,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்- மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

23 மாண்புமிகு திரு. பி.மூர்த்தி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்- வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு

24 மாண்புமிகு திரு. எஸ்.எஸ்.சிவசங்கர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் - பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்

25 மாண்புமிகு திரு. பி.கே.சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் - இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்

26 மாண்புமிகு திரு. பழனிவேல் தியாகராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் - நிதித்துறை, திட்டம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், அரசு - ஊழியர்களின் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய சலுகைகள்

27 மாண்புமிகு திரு. சா.மு.நாசர்,பால்வளத் துறை அமைச்சர் - பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

28 மாண்புமிகு திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான்,சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் - சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வஃக்ப் வாரியம்

29 மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி,பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் - பள்ளிக் கல்வி

30 மாண்புமிகு திரு.சிவ.வீ.மெய்யநாதன், சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன்,விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்- சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

31 மாண்புமிகு திரு. சி.வி.கணேசன், தொழிலாளர்கள் நலன், திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்- தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

32 மாண்புமிகு திரு. த.மனோ தங்கராஜ்,தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்- தகவல் தொழில்நுட்பத் துறை

33 மாண்புமிகு திரு. மா.மதிவேந்தன், சுற்றுலாத்துறை அமைச்சர்- சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

34 மாண்புமிகு திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்- ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

☞ **தமிழக அரசின் தலைமைக் கொறடாவாக திருவிடைமருதூர் சட்டப்பேரவை உறுப்பினர் கோவி.செழியன்** நியமிக்கப்பட்டுள்ளார்.

☞ **'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற புதிய துறையை உருவாக்கி, தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது**. இதன் **சிறப்பு அலுவலராக ஐஏஎஸ் அதிகாரி ஷில்பா பிரபாகர் சதீஷ்** நியமிக்கப்பட்டுள்ளார்.

☞ **தமிழகத்தின் 8வது முதலமைச்சராக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 7 மே 2021 அன்று பதவியேற்றார்கள்.** அவருடன் 33 அமைச்சர்களும் பதவியேற்றனர்.

☞ **நடந்து முடிந்த சட்டசபை தேர்தல் 2021 -ல் தி.மு.க அமோக வெற்றி பெற்றுள்ளது.** திமுக தனித்து 125 இடங்களையும் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட 8 பேர் வெற்றிப் பெற்றதுடன் சேர்த்து 133 இடங்களையும் பெற்றுள்ளது.

மொத்தமாக, திமுக கூட்டணி 159 இடங்களை பெற்றுள்ளது. தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி 18 இடங்களையும், இடதுசாரி கட்சிகள் (Communist Party of India, Communist Party of India (Marxist)) தலா 2 இடங்களையும், மதிமுக, விசிக தலா 4 இடங்களையும், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட இதர கட்சிகள் - 4 இடங்களில் வெற்றி பெற்று உள்ளன.

மொத்தமாக, அதிமுக கூட்டணி - 75 இடங்களில் வெற்றி பெற்றது. அதில், அதிமுக - 66, பாமக - 5 , பாஜக - 4 இடங்களில் வெற்றிபெற்றுள்ளன.

மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர், அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் எங்கும் வெற்றி பெறவில்லை.

கட்சிகள் பெற்ற வாக்கு சதவீதம்

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி (மொத்த வாக்கு சதவீதம் - 45.39%)

திமுக - 37.70%

இந்திய தேசிய காங்கிரஸ் - 4.27%

சிபிஐ - 1.09%

விடுதலை சிறுத்தைகள் கட்சி - 0.99%

சிபிஎம் - 0.85%

இந்திய ஒன்றிய முஸ்லிம் லீக் - 0.48%

தேசிய ஜனநாயகக் கூட்டணி (மொத்த வாக்கு சதவீதம் -39.71%)

அதிமுக - 33.29%

பாமக - 3.80%

பாஜக - 2.62%

பிற கட்சிகள்

நாம் தமிழர் கட்சி - 6.85%

அமமுக - 2.34%

தேமுதிக - 0.43%

மநீம - 2.45%

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி - 0.21%

இந்திய ஜனநாயக கட்சி - 0.085%

NOTA - 0.75%

☞ **சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழகத்திலேயே அதிக வாக்கு வித்தியாசத்தில், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி திமுக வேட்பாளர் ஐ.பெரியசாமி அமோக வெற்றி பெற்றுள்ளார்.** இவர் 1 லட்சத்து 34 ஆயிரத்து 82 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் அமோக வெற்றிபெற்று, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களையும் டெபாசிட் இழக்கச் செய்தார்.

☞ **சுதந்திரப் போராட்ட வீரரும், மகாத்மா காந்தியின் தனிச் செயலராக இருந்தவருமான வி.கல்யாணம் 4-5-2021 அன்று சென்னையில் காலமானார்.** அவருக்கு வயது 99.

☞ **சமூக ஆர்வலர் டிராஃபிக் ராமசாமி 4-5-2021 அன்று காலமானார்.** கடந்த 1934 செய்யாறில பிறந்த இவர், நூல் ஆலை மேற்பார்வையாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். சென்னை பாரிமுனையில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணிக்காக காவல் துறை சார்பில் இவருக்கு ஒரு அடையாள அட்டை வழங்கப்பட்டது. அன்று முதல் மக்களிடத்தில் இவர் டிராபிக் ராமசாமி என்று அறிப்பட்டார்.

☞ **கொரோனா தொற்றுநோய் பரவல் காலத்தில், செய்திகளை மக்களிடம் கொண்டுசேர்ப்பதற்காக உழைத்துவரும் பத்திரிகையாளர்களும் ஊடகவியலாளர்களும் இனி முன்களப் பணியாளர்களே என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

☞ **தமிழ் திரைப்பட இயக்குநர் KV ஆனந்த் (Karimanal Venkatesan Anand)) அவர்கள் கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு காலமானார்.**

www.tnpscportal.in

☛ **ஆக்ஸிஜன் மற்றும் அது தொடர்பான மருத்துவ கருவிகளை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு மானியமாக 30% மூலதனம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் தவணை முறையில் வழங்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது.** இந்த சலுகையைப் பெற ஆக்ஸ்ட் 15ம் தேதிக்குள் அந்நிறுவனங்கள் உற்பத்தியை துவங்க வேண்டும்.

☛ **கரோனா வைரஸ் பரவல் 2-வது அலையைத் தடுக்க சுகாதாரத் துறை உள்ளிட்ட துறைகள் இணைந்து, சென்னை தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள தேசிய நலவாழ்வுக் குழும அலுவலகத்தில் 'வார் ரூம்' (War Room) எனப்படும் ஒருங்கிணைந்த கட்டளை மையம் (UCC) அமைக்கப்பட்டுள்ளது.** இந்த கரோனா கட்டளை மையத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக தாரேஸ் அகமது ஐஏஎஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.


**TNPSC குரூப் 2,2A 2021 தேர்வுக்கு**

**இப்போதே தயாராகுங்கள் !!!**

முழு பாடத்திட்டத்தையும் குறுகிய காலத்தில் படித்து பயிற்சி செய்வதற்கான

மிகச்சிறந்த Study Plan உடன் ஆன்லைன் தேர்வு வகுப்புகள்.

**NEW ONLINE TEST BATCH**

**STARTS FROM 6-6-2021**

**45 தேர்வுகள் | Tamil & English Mediums**

ஒவ்வொரு தேர்விலும் 200 வினாக்கள் | முதல் தேர்வை இலவசமாகப் பயிற்சி செய்யுங்கள்

**www.portalacademy.in | 8778799470**

# இந்தியா

☛ **'ஆம்பிடேக்' (AmbiTAG)** : குளிர் சாதனங்களில் கொண்டு செல்லப்படும் பொருட்களின் வெப்பநிலையை கண்காணிக்கும் 'ஆம்பிடேக்' (AmbiTag ) என்ற கருவியை பஞ்சாப்பில் உள்ள ரோபர் ஐஐடி உருவாக்கியுள்ளது.

☛ **'வஜ்ரா கவசம்' (Vajra Kavach)** : கொரோனா முன்களப் போராளிகளுக்கு மேலும் ஒரு வரப்பிரசாதமாக அவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களில் இருக்கும் தொற்றுக்களை நீக்குவதற்காக வஜ்ரா கவசம் என்ற இயந்திரத்தை மும்பையைச் சேர்ந்த இந்திரா வாட்டர் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த இயந்திரம், கிருமி நாசினி அமைப்பு முறை, முழு உடல் கவசம், என் 95 முகக் கவசங்கள், உடைகள், கையுறைகள் போன்றவற்றில் தென்படும் தொற்றின் தடயங்கள் முழுவதையும் நீக்கும் சிறப்பம்சம் பெற்றுள்ளது. இதன் மூலம் மருத்துவ பணியாளர்கள், உடல் கவச ஆடைகள் மற்றும் இதரப் பொருட்களை மீண்டும் பயன்படுத்த முடியும்.

☛ **கொரோனா மரண சம்பவங்கள் அதிகரிப்பு காரணமாக, குடும்ப உறுப்பினர்கள் நலன் பற்றி தொழிலாளர்களின் அச்சம் மற்றும் கவலையை போக்க, இஎஸ்ஐசி மற்றும் இபிஎப்ஓ திட்டங்கள் மூலமாக கூடுதல் பலன்களை மத்திய தொழிலாளர் அமைச்சகம் அறிவித்துள்ளது.** இதன்படி,

1. இறந்த தொழிலாளியின் குடும்பத்தினருக்கு கிடைக்கும் அதிகபட்ச பண பலன் ரூ.6 லட்சத்திலிருந்து ரூ.7 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

2. இறப்புக்கு முன்பு, உறுப்பினராக இருந்த ஒரு தொழிலாளி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனத்தில் தொடர்ந்து 12 மாதங்கள் பணியாற்றியிருந்தால், அவரது குடும்பத்தினருக்கு குறைந்தபட்ச உத்திரவாத பணப் பலன் ரூ.2.5 லட்சம் கிடைக்கும். இதற்கு முன்பு, இந்த விதிமுறை, ஒரே நிறுவனத்தில் தொடர்ந்து 12 மாதங்கள் பணியாற்றியிருக்க வேண்டும் என இருந்தது. அது தற்போது மாற்றப்பட்டுள்ளது. இது ஒரு நிறுவனத்தில் தொடர்ந்து ஓராண்டு பணியாற்றியிருக்க வேண்டும் என்ற நிபந்தனை காரணமாக பலன்களை இழக்கும் ஒப்பந்தம்/ சாதாரண தொழிலாளர்களுக்கு பயன் அளிக்கும்.

2020 பிப்ரவரி 15-ல் இருந்து அடுத்த 3 வருடங்களுக்கு இது அமலில் இருக்கும்.

☛ **இந்தியாவில் பாசுமதி அல்லாத அரிசியின் ஏற்றுமதிக்கான சாத்தியக்கூறுகளை ஊக்குவிக்கும் வகையில் கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 4.5 மெட்ரிக் டன் 'கிராம அரிசியை' (village rice) உதயா வேளாண் பண்ணை (Udaya Agro Farm) என்ற புதுமை நிறுவனம் விமானம் மற்றும் கப்பல் வழியாக கானாவிற்கும், ஏமனுக்கும் ஏற்றுமதி செய்துள்ளது**.

**கூ.தக.** : கடந்த மார்ச் 2021 மாதத்தில் அசாமில் இருந்து முதல் முறையாக சிகப்பு அரிசி அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. எந்தவிதமான ரசாயன உரங்களின் பயன்பாடும்

இல்லாமல் அசாமின் பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கில் இரும்பு சக்தி மிகுந்த சிகப்பு அரிசி விளைவிக்கப்படுகிறது.

☛ **இந்திய கடற்படையின் ஏஎல்ஹெச் மார்க் 3 ரக விமானத்தில் அவசர சிகிச்சைப் பிரிவு (ஐசியு) வசதியை இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனம் (ஹெச்ஏஎல்) பொருத்தியுள்ளது**.

இதன் மூலம் மோசமான வானிலை சமயத்தில், உயிருக்கே ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை கடற்படை விமானம் மூலம் கொண்டு செல்ல முடியும்.

☛ **ராணுவத்தினர் மற்றும் முன்னாள் ராணுவத்தினருக்கான தொலைதூர மருத்துவ சேவை இணையதளத்தை (https://sehatopd.in/)** மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் 27-5-2021 அன்று காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.

☛ **நாடு முழுவதும் மதிய உணவுத் திட்டத்தில் பயனாளர்களாக உள்ள 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் பயிலும் அரசு மற்றும் அரசு நிதிப்பெறும் பள்ளிகளில் பயிலும், 11.8 கோடி மாணவர்களுக்கு நேரடி பயனர் பணப்பரிமாற்ற (Direct Benefit Transfer) முறையில் தலா ரூ.100/- உதவித்தொகையாக வழங்கும் திட்டத்தை** கல்வி அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் அறிவித்துள்ளார். இந்த திட்டத்திற்காக ரூ.1200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

☛ **பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்துபவர்களை தண்டிக்கும் வகையில் இந்திய தண்டனைச் சட்டம் 1860 (Indian Penal Code (IPC)) ஐ மறுசீரமைப்பதற்கான 5 நபர் குழுவை** புது **தில்லியிலுள்ள தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் (தற்போது ஸ்ரீகிருஷ்ண தேவ ராய்)** தலைமையில் மத்திய உள்துறை அமைச்சகம் அமைத்துள்ளது.

☛ **மத்திய பிரதேச மாநில அரசு 'அங்கூர்' (Ankur) எனும் புதுமையான திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த திட்டத்தின் படி, மழைக்காலங்களில் மரங்களை நடுவதற்காக அம்மாநில மக்களுக்கு 'பிராண்வாயு' ("Pranvayu") எனப்படும் விருது** வழங்கப்படும்.

☛ **"யுவா (இளம், வளர்ந்து வரும் மற்றும் ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர்கள்) திட்டம்' (YUVA - Young, Upcoming and Versatile Authors) என்ற பெயரில், பல்துறைகளில் வளரும் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கான திட்டத்தை மத்திய உயர்கல்வித் துறை 29-5-2021 அன்று தொடங்கியுள்ளது.**

30 வயதுக்கு குறைவான இளைஞர்களுக்கான இந்தத் திட்டத்தில் புத்தகம் படித்தல், புத்தகம் எழுதுதல் போன்ற கலாசாரங்களை ஊக்குவித்து இந்திய மற்றும் சர்வதேச அளவிலான எழுத்தாளர்களாக அவர்களை ஊக்குவிக்கும் பயிற்சிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள "நேஷனல் புக் டிரஸ்ட்' இந்தத் திட்டத்தை வரைமுறைகளின்படி செயல்படுத்தும் அமைப்பாக இருக்கும்.

இதற்கான அகில இந்திய தேர்வு வருகின்ற ஜூன் 1-ஆம் தேதி முதல் ஜூலை 31-ஆம் தேதிவரை நடத்தப்படும். இதில் 75 புத்தக எழுத்தாளர்கள் தேர்வு செய்யப்பட்டு இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதோடு ஆறு மாத காலத்திற்கு மாதம் ரூ. 50,000 உதவித்தொகையும் அளிக்கப்படும். இந்த எழுத்தாளர்கள் பெயர் மற்றும் புத்தகங்கள் விவரங்கள் 2021 ஆகஸ்ட் 15 -ஆம் தேதி அறிவிக்கப்பட்டு பின்னர் அவர்களது புத்தகங்கள் அச்சுக்கு அனுப்பப்படும். இந்த புத்தகங்கள் தேசிய இளைஞர்கள் தினமான ஜனவரி 12 (2022) அன்று வெளியிடப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞ **புல்வாமா பயங்கவாத தாக்குதலில் வீரமரணம் அடைந்த ராணுவ அதிகாரி விபூதி சங்கர் தவுந்தியாலின் மனைவி நிகிதா கௌல்** சென்னையில் உள்ள ராணுவ அதிகாரிகள் பயிற்சி அகாதெமியில் (ஓடிஏ) ஓராண்டு பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து அதிகாரியாக (லெப்டினன்ட்) ராணுவத்தில் இணைந்துள்ளார்.

**கூ.தக.** : கடந்த 2019, பிப்ரவரி 14-ம் தேதி ஜம்மு-காஷ்மீரின் புல்வாமா பகுதியில் பயங்கரவாதிகளின் தற்கொலைப் படைத் தாக்குதலில் 40 சி.ஆர்.பி.எஃப் வீரர்கள் கொல்லப்பட்டனர்.

☞ **கரோனா வைரஸ் நோய்த் தொற்றால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வழங்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்** இதன்படி, . கரோனா தொற்றால் பெற்றோர்களை இழந்த குழந்தைகள் 18 வயதைக் கடந்த பிறகு, அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும்.

கரோனா தொற்றால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளின் உயர்கல்விக் கடனுக்கு உதவிகள் வழங்கப்படும். அதற்கான வட்டி, பிஎம் கேர்ஸ் நிதியிலிருந்து செலுத்தப்படும்.

கரோனா தொற்றால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு 18 வயதைக் கடக்கும் வரை ரூ. 5 லட்சம் மதிப்பில் இலவச காப்பீடு வழங்கப்படும். அதற்கான தொகை பிஎம் கேர்ஸ் நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

☞ **'யாஸ்' புயல் காரணமாக கடும் பாதிப்புகளைச் சந்தித்த ஒடிஸாவுக்கு ரூ.500 கோடியும், மேற்கு வங்கம், ஜார்க்கண்ட் மாநிலங்களுக்கு ரூ.500 கோடியும் உடனடி நிவாரணமாக வழங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

☞ **பிரதமர் மோடியின் மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஐ.சி.ஜி. சஜாக் கப்பல் 29-5-2021 அன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.**

☞ **இந்தியாவில் கண்டறியபட்ட உருமாறிய கொரோனா வைரஸான பி.1.617 வகை வைரஸ் 53 நாடுகளில் காணப்படுகிறது என சுகாதார அமைப்பு தெரிவித்து உள்ளது.** இந்த வகை வைரஸ்கள் மூன்று வகைகளாக உள்ளன. பி.1.617.1, பி.1.617.2, பி.1.617.3 ஆகிய பிரிவுகளில் உள்ளன.

இவைகளில் , பி.1.617.1 வகை வைரஸ்கள் 41 நாடுகளிலும், பி.1.617.2 வகை உருமாற்ற வைரஸ் 54 நாடுகளிலும், பி.1.617.3 வகை வைரஸ் 6 நாடுகளிலும் கண்டறியப்பட்டுள்ளன. இதில் பி.1.617 வகை உருமாற்றம் அடைந்த வைரஸ் கவலைக்குரியதாக இருக்கிறது. இந்த வகை வரைஸ் அதிகமாகப் பரவும் சக்தி கொண்டதாகவும், நோயின் தீவிரத்தை அதிகப்படுத்தும், மீண்டும் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

☞ **கோவேக்ஸின் தடுப்பூசியை தயாரிப்பதற்கான உள்ளீட்டு மருந்துப் பொருள் ஒன்றை உற்பத்தி செய்வதற்காக பாரத் பயோடெக் நிறுவனம் - குஜராத் கரோனா தடுப்பூசி கூட்டமைப்பு (ஜிசிவிசி) இடையே ஒப்பந்தம்** மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த கூட்டமைப்பில், குஜராத் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம், ஹெஸ்டர் உயிரி அறிவியல் நிறுவனம், ஆம்னிபிரிக்ஸ் உயிரி தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை அங்கம் வகிக்கின்றன.

☞ **இந்தியாவுக்கான இந்தோனேசியாவின் துணைத் தூதராக பணியாற்றி வந்த பெர்டி நிக்கோ யோகன்னஸ் பியா கொரோனா நோயினால் பலி**யாகியுள்ளார்.

☞ **வரும் 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் பொறியியல் பாடங்களை தமிழ் மொழியில் கற்பிக்க அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் அனுமதி** வழங்கி உள்ளது.

☞ **ரக்ஷிதா (Rakshita)** என்று பெயரில் மத்திய ரிசர்வ் காவல் படையினருக்காக இருசக்கர ஆம்புலன்ஸ் வாகனத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ) வடிவமைத்துள்ளது.

டெல்லியில் உள்ள டிஆர்டிஓ நிறுவனத்தின் மருத்துவ ஆராய்ச்சி ஆய்வகமான 'அணு மருத்துவ மற்றும் சார்பு அறிவியல் நிறுவனம்'(இன்மாஸ்) இந்த வாகனத்தை வடிவமைத்துள்ளது. இதே ஆய்வகம்தான், கரோனா எதிர்ப்புமருந்தான 2டிஜி-யை உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.

☞ **நான்கு புதிய தேசிய ஹெல்ப்லைன் எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவையாவன,**

1075 - **சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தேசிய ஹெல்ப்லைன் எண்** (National Helpline no. of Ministry of Health & Family Welfare)

1098 - **பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் குழந்தைகளுக்கான உதவி எண்** (Child Helpline no. of Ministry of Women & Child Development)

14566 - **சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சின் மூத்த குடிமக்களுக்கான உதவி எண்** (Senior Citizens Helpline of Ministry of Social Justice & Empowerment)

08046110007 - **மனநல ஆதரவை வழங்கும் தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனத்தின்** (National Institute of Mental Health and Neurosciences (NIMHANS)) **ஹெல்ப்லைன் எண்.**

இது தவிர, COVID-19 எழுப்பிய சவால்களுக்கான அணுகுமுறைகளையும் தீர்வுகளையும் வழங்க ஆயுஷ் அமைச்சகத்தால் 14443 என்ற சமூக ஆதரவு ஹெல்ப்லைன் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

1075 என்ற கோவிட் ஹெல்ப்லைன் எண் இப்போது கிராமப்புற இந்தியாவுக்கு தடுப்பூசி இடங்களை பதிவு செய்ய திறக்கப்பட்டுள்ளது. 1075 கோவிட் ஹெல்ப்லைன் எண் இப்போது கிராமப்புற இந்தியாவுக்கு தடுப்பூசி இடங்களை பதிவு செய்ய திறக்கப்பட்டுள்ளது.

☞ **இந்திய ஒளிபரப்பு அறக்கட்டளையின் (Indian Broadcasting Foundation (IBF)) பெயர் இந்திய ஒளிபரப்பு மற்றும் டிஜிட்டல் அறக்கட்டளை (Indian Broadcasting and Digital Foundation (IBDF))** என மறுபெயரிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் ஸ்ட்ரீமிங் தளங்களை உள்ளடக்குவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

☞ **'ப்ளூம்பெர்க் பில்லினியர் பட்டியலின்' (Bloomberg Billionaire Index) படி ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரர்களின் பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு,**

முதலிடம் - முகேஷ் அம்பானி, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், இந்தியா

இரண்டாமிடம் - கவுதம் அதானி, அதானி குழுமம், இந்தியா

மூன்றாமிடம் - சோங் சான்சன் ( Zhong Shanshan), சீனா

நான்காமிடம் - மா ஹுவாடேங் ( Ma Huateng), சீனா

☞ **மத்திய ஆயுஷ் அமைச்சகம், கொவிட் -19 தொடர்பான பிரச்சனைகளுக்கு, ஆயுஷ் அடிப்படையிலான அணுகுமுறைகளையும், தீர்வுகளையும் வழங்குவதற்காக, பிரத்யேக ஹெல்ப்லைன் (எண் 14443) ஒன்றைத் துவக்கியுள்ளது.** கட்டணமில்லா இந்தத் தொலைபேசி ஹெல்ப்லைன் எண் 14443, இந்தியா முழுவதும் காலை 6 மணி முதல் நள்ளிரவு 12 வரை, வாரத்தின் ஏழு நாட்களும், செயல்படும்.இந்த ஹெல்ப்லைன் மூலம், ஆயுர்வேதம், ஹோமியோபதி, யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா ஆகிய பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் பொது மக்களின் கேள்விகளுக்கு தீர்வு சொல்வார்கள்.

☞ **புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஈர்ப்புத்தன்மை பட்டியல் 2021 ( Renewable Energy Country Attractiveness Index 2021) ல் இந்தியா மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.** முதல் இரண்டு இடங்களை முறையே அமெரிக்கா மற்றும் சீனா நாடுகள் பெற்றுள்ளன. இந்த பட்டியலை லண்டனைத் தலைமையிடமாகக் கொண்ட Ernst & Young Global Ltd எனும் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

☞ **கேரளாவில் 15-வது சட்டப்பேரவைக் கூட்டத்தில் தேவிகுளம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்எல்ஏவும், வழக்கறிஞருமான ஏ.ராஜா, தமிழில் பதவி ஏற்றுக்கொண்டார்.**

☞ **வன் தன் (Van Dhan) யோஜனாவை செயல்படுத்துவதற்காக 'இந்திய மலைவாழ் மக்களுக்கான கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பு' (Tribal Cooperative Marketing Development Federation of India (TRIFED)) மற்றும் நிதி அயோக் (NITI Aayog) இணைந்து செயல்படவுள்ளதாக அறிவித்துள்ளன.** ஆந்திரப் பிரதேசம், அசாம், சத்தீஸ்கர், குஜராத், ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து,

ஒடிசா, தெலங்கானா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களில் வளரத் துடிக்கும் 39 மாவட்டங்கள் என்று நிதி ஆயோக்கால் அடையாளம் காணப்பட்டுள்ள மாவட்டங்களில் இவ்விரு அமைப்புகளின் கூட்டு ஒத்துழைப்புடன் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

☞ **கொவிட்-19 தொற்று சூழல் காரணமாக வாழ்வாதரத்தில் இடையூறுகள் ஏற்பட்டதால், திருநங்கைகளின் அடிப்படை தேவைகளுக்கு உடனடி உதவி அளிக்க தலா ரூ.1,500 பிழைப்பூதியமாக** வழங்க மத்திய சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

☞ **கொவிட்- 19 தொற்றுக்கு எதிராக முழுவீச்சுடன் போராடிவரும் மருத்துவப் பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் முழு உடல் கவசத்தில் பயன்படுத்தப்படும் புதிய செயற்கை சுவாசக் கருவியை மும்பையைச் சேர்ந்த மாணவர் திரு நிஹால் சிங் ஆதர்ஷ் கண்டுபிடித்துள்ளார்**. கோவ்-டெக் (Cov-Tech) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கையடக்க, எளிய கண்டுபிடிப்பு, வெறும் நூறு நொடிகளில் தூய்மையான காற்றை வெளியிடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

☞ **மக்கள் மைய சேவைக்கு, இலவச "மின்னணு-நீதிமன்றங்கள் சேவை கைபேசி செயலி"("e-Courts Services Mobile App")** -க்கான கையேட்டை தமிழ், ஆங்கிலம், இந்தி, அசாமி, பெங்காலி, குஜராத்தி, கன்னடம், காசி, மலையாளம், மராத்தி, நேபாளி, ஒடியா, பஞ்சாபி, தெலுங்கு ஆகிய 14 மொழிகளில் உச்சநீதிமன்றத்தின் மின்னணுக் குழு 23-5-2021 அன்று வெளியிட்டுள்ளது.

☞ **இந்தியாவில் பரவிவரும் கரோனா வைரஸுக்கு எதிராக, நோயாளிகளின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆன்டிபாடி காக்டெயில் மருந்தை ரோச் இந்தியா மருந்து நிறுவனம் இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது.**

'கேஸிர்விர்மாப்', 'இம்டெவிமாப்' ஆகிய இரு பெயர்களில் இந்த மருந்தை ரோச் இந்தியா நிறுவனம் அறிமுகம் செய்கிறது. அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்புக்கு கரோனா தொற்று ஏற்பட்டிருந்தபோது அவருக்கு இந்த ஆன்டிபாடி காக்டெயில் மருந்துதான் செலுத்தப்பட்டது.

☞ **இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினர் தாக்குதலில் உயிரிழந்த கேரள மாநிலம் இடுக்கியை சேர்ந்த சவும்யா (30) என்ற பெண்ணிற்கு இஸ்ரேல் அதிபர் ரேவென் ரிவ்லின் ஆறுதல்** தெரிவித்துள்ளார்.

☞ **ஏர் இந்தியா விமான நிறுவன இணையதள சர்வரான எஸ்ஐடிஏ-அமைப்பில் கடந்த பிப்ரவரி மாதம் நடத்தப்பட்ட சைபர் தாக்குதலில்**, கடந்த 2011 ஆகஸ்ட் 11 முதல் 2021 பிப்ரவரி 2-ம் தேதிவரையிலான உலக அளவிலான பயணிகளின் தனிப்பட்ட விவரங்கள் அனைத்தும் கசிந்துள்ளன என்று ஏர் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

☞ **"டிப்கோவன்" (DIPCOVAN)** என்ற பெயரில், கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு ஏற்பட்ட பின்பு உடலில் கொரோனாவுக்கு எதிரான நோய் எதிர்ப்பு பொருள் (ஆன்டிபாடி) எந்தளவுக்கு இருக்கிறது என்பதை கண்டுபிடிக்க உதவும் புதிய கருவி இந்தியாவில் முற்றிலும் உள்நாட்டு

விஞ்ஞானிகளைக்கொண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கருவி கொரோனா வைரசின் ஸ்பைக் மற்றும் நியூக்ளியோகேப்சிட் (எஸ் அண்ட் என்) புரதங்களை நேர்த்தியாக கண்டுபிடிக்கும். இந்தக் கருவியை டி.ஆர்.டி.ஓ. என்னும் ராணுவ ஆராய்ச்சி, மேம்பாட்டு அமைப்பின் கீழ் செயல்படும் உடலியல் மற்றும் அதன் சார்பு அறிவியல்கள் தொடர்பான பாதுகாப்பு நிறுவனமும், டெல்லியை சேர்ந்த வான்கார்டு டயாக்னஸ்டிக் நிறுவனமும் சேர்ந்து கண்டுபிடித்துள்ளன.

☞ **இந்திய கடற்படையில் 41 ஆண்டுகள் பணியாற்றிய ஐஎன்எஸ் ராஜ்புத் என்ற போர்க்கப்பல் கடற்படையிலிருந்து 20-5-2021 அன்று விடுவிக்கப்பட்டுள்ளது**. ரஷியாவில் தயாரிக்கப்பட்ட கஷின் ரகத்தைச் சேர்ந்த இந்த போர்க்கப்பல், இந்திய கடற்படையில் கடந்த 1980 மே 4-ஆம் தேதி சேர்க்கப்பட்டது.

☞ **கரோனாவை எதிர்த்துப் போராட 'இளம் வீரர்' இயக்கத்தில் இணையுமாறு 18 முதல் 30 வயதுக்கு உள்பட்ட இளைஞர்களுக்கு சிபிஎஸ்இ-யுனிசெஃப் ஆகியவை அழைப்பு விடுத்துள்ளன.** கரோனாவை எதிர்த்துப் போராட நாடு முழுவதும் 5 கோடி இளைஞர்களை ஒருங்கிணைக்கும் இயக்கமாக இளம் வீரர் இயக்கம் செயல்படும்.

☞ **சுற்றுச்சூழல் ஆர்வலர் சுந்தர்லால் பகுகுணா கரோனா தொற்றால் உயிரிழந்தார்.** உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் சுந்தர்லால் பகுகுணா மரங்கள், காடுகளைக் காக்க தொடர்ந்து பல்வேறு இயக்கத்தை முன்னெடுத்தவர். 1973 ஆம் ஆண்டு மரங்களைக் காக்க உத்தரகண்ட் சமோலி பகுதியில் பெண்கள் முன்னெடுத்த 'சிப்கோ' இயக்கத்தை தொடங்கிவைத்தவர்.

இவரது தொடர் போராட்டங்களின் காரணமாகவே 1980ல் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, மரங்களை வெட்டுவதற்கு தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

☞ **கரோனாவை எதிர்த்துப் போராட 'இளம் வீரர்' இயக்கத்தில் இணையுமாறு 18 முதல் 30 வயதுக்கு உள்பட்ட இளைஞர்களுக்கு சிபிஎஸ்இ-யுனிசெஃப் ஆகியவை அழைப்பு விடுத்துள்ளன.** கரோனாவை எதிர்த்துப் போராட நாடு முழுவதும் 5 கோடி இளைஞர்களை ஒருங்கிணைக்கும் இயக்கமாக இளம் வீரர் இயக்கம் செயல்படும்.

☞ **யாஸ் புயல் (Yaas cyclone) :** வடக்கு அந்தமான் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாகவும், 24-5-2021-ஆம் தேதியில் புயலாக தீவிரமடைந்து வடமேற்கு நோக்கி நகர்ந்து 26-5-2021-ஆம் தேதி ஒடிசா மாநிலம் பாலாசோர் அருகே கரையை கடந்தது.

**கூ.தக. :** யாஸ் புயலுக்கு பெயர் சூட்டிய நாடு - ஓமன் | யாஸ் என்ற பாரசீகப் பதத்திற்கு மல்லிகைப்பூ எனப் பொருளாகும்.

☞ **தடுப்பூசி விற்பனை இந்திய அரசுடன் மட்டும்தான் மேற்கொள்வோம், மாநில அரசுகளுடன் வர்த்தகம் செய்ய முடியாது என்று மார்டனா மருந்து நிறுவனம்** தெரிவித்துள்ளது.

☞ **வீட்டிலேயே தொற்றை பரிசோதிக்கும் 'கோவிசெல்ப் கிட்' எனப்படும் ரேப்பிட் ஆன்டிஜென் டெஸ்ட் (ஆர்.ஏ.டி.) கருவிக்கு இந்திய மருத்துவ ஆய்வு கவுன்சில் (ஐ.சி.எம்.ஆர்.) அனுமதி அளித்து உள்ளது**. புனேவை மையமாக கொண்டு செயல்படும் மைலேப் டிஸ்கவர் சல்யூஷன்ஸ் நிறுவனம் இந்த கருவியைத் தயாரித்து உள்ளது. பேத்தோ கேட்ச் (PathoCatch) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தக் கிட்டின் விலை வரிகள் உட்பட ரூ.250 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

☞ **இந்தியாவில் முற்றிலும் ஒழிந்து போன சிறுத்தைப்புலியை (Cheetah) ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டுவருவதற்கு , மத்திய பிரதேசத்திலுள்ள கூனோ தேசிய பூங்கா (Kuno National Park) திட்டமிட்டுள்ளது.**

☞ **'ஆயுஷ்மான் பாரத்' (Ayushman Bharat) திட்டத்தின் கீழ், 2020-21 ல் அதிக அளவில் 'சுகாதார மற்றும் நல மையங்களை' (Health & Wellness Centre (HWC)) உருவாக்கியுள்ள மாநிலங்களில் முதலிடத்தை கர்நாடகா மாநிலம்** பெற்றுள்ளது.

கிராமப்புறங்களில் விரிவான ஆரம்ப சுகாதார சேவையை வழங்க 'சுகாதார மற்றும் நல மையங்ள் நிறுவப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டு டிசம்பருக்குள் 1.5 இலட்சம் 'சுகாதார மற்றும் நல மையங்களை' அமைக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

**ஆயுஷ்மான் பாரத் திட்டம் பற்றி ...**

2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் இரண்டு முக்கிய தூண்களாக 'சுகாதார மற்றும் நல மையங்கள்' மற்றும் 'பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா' (Pradhan Mantri Jan Arogya Yojana (PMJAY)) ஆகியவை உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

☞ **'ஸ்மார்ட் சிட்டி திட்டத்தை' ( Smart City projects) சிறந்த முறையில் செயல்படுத்தி வரும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பட்டியலில் முதலிடத்தை ஜார்க்கண்ட் மாநிலம் பெற்றுள்ளது.** இந்த பட்டியலை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் (Ministry of Housing and Urban Affairs) மே 2021 ல் வெளியிட்டுள்ளது.

**ஸ்மார்ட் சிட்டி திட்டம் பற்றி ...**

2015 ஆம் ஆண்டில் ரூ.48000 கோடி செலவில் தொடங்கப்பட்ட ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் மூலம் இந்தியா முழுவதும் சுமார் 100 நகரங்கள் ஸ்மார்ட் நகரங்கலாக மாற்றப்பட்டு வருகின்றன.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்திற்கு 2021-22 நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் ரூ. 6, 450 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

☞ **செயற்கை நுண்ணறிவு மற்றும் பிளாக்செயின் தொழில்நுட்பத்தில் உலகின் முதல் தனியார் டிஜிட்டல் நீதிமன்றத்தை ( World's first Private Digital Court) சண்டிகாரைச் சேர்ந்த 'Jupitice Justice Technologies' எனும் நிறுவனம் தயாரித்துள்ளது.**

☞ 2030 **ஆம் ஆண்டிற்குள்** 450 **ஜிகா வாட் சூரிய ஆற்றல் உற்பத்தி திறனை எட்டுவதற்கான இந்தியாவின் இலக்கை அடைய அமெரிக்கா உதவி புரியும் என அந்நாட்டின் பருவநிலைக்கான அதிபரின் தூதுவர் ஜான் கெரி** தெரிவித்துள்ளார்.

☞ **உலகளவில்** 100 **மிக அதிக சுற்றுசூழல் அபாயமுள்ள நகரங்களின் பட்டியலில் முதல் மூன்று இடங்களை முறையே ஜகார்த்தா (இந்தோனேசியா) , புது தில்லி மற்றும் சென்னை ஆகியவை பெற்றுள்ளன.** Verisk Maplecroft எனும் நிறுவனம் இந்த ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது.

☞ **'தேசிய டிஜிட்டல் நிதி உட்கட்டமைப்பு' (National Digital Financial Infrastructure (NADI)) என்ற பெயரில் அடுத்த தலைமுறை டிஜிட்டல் நிதி உட்கட்டமைப்பை ரிசர்வங்கியின் கீழ் இயங்கும் வங்கி தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (Institute for Development and Research in Banking Technology (IDRBT)) உருவாக்கி வருகிறது**.

☞ **இந்தியாவின் முதலாவது விவசாய ஏற்றுமதி வசதி மையம் (Agriculture Export Facilitation Center) மகாராஷ்டிர மாநிலம் பூனே நகரில்** மராத்தா வர்த்தகம் , தொழிற்சாலைகள் மற்றும் வேளாண் கூட்டமைப்பு (Mahratta Chamber of Commerce Industries & Agriculture (MCCIA)) மற்றும் நபார்டு வங்கியின் கூட்டமைப்பில் (National Bank for Agriculture and Rural Development (NABARD)) அமைக்கப்பட்டுள்ளது.

☞ **இந்தியாவில் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்தின் கோவிட்-19 தடுப்பூசியை தயாரிக்க ஹைதராபாத்தைச் சேர்ந்த 'பயாலஜிக்கல்-இ'(Biological E) நிறுவனம் ஒப்பந்தம்** மேற்கொண்டுள்ளது.

☞ **யுனெஸ்கோவின் பாரம்பரிய பட்டியலில், இந்தியா சார்பில் முன்மொழியப்பட்ட 48 இடங்களில் 6 இடங்களை யுனெஸ்கோ அமைப்பு தேர்வு செய்துள்ளது**. இதில் கோயில்களின் நகரம் என அழைக்கப்படும் காஞ்சிபுரத்தில் உள்ள கோயில்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் மராத்தா மிலிட்டரி கட்டிடக்கலை, சத்புரா புலிகள் காப்பகம், வாரணாசி நகரில் அமைந்துள்ள கங்கைக்கரையோர படித்துறைகள், கர்நாடகத்தில் உள்ள ஹிரே பெனக்கல் - பெருங்கற்கால பாறைகள், நர்மதா பள்ளத்தாக்கில் உள்ள பேடாகாட்-லம்ஹேடாகா படித்துறைகள் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

☞ **'சம்வேத்னா' (SAMVEDNA - Sensitizing Action on Mental Health Vulnerability through Emotional Development and Necessary Acceptance)** என்ற பெயரில் COVID-19 தொற்றுநோய்களின் போது பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான கட்டணமில்லா ஹெல்ப்லைன் சேவையை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய குழந்தைகள் உரிமை ஆணையம் தொடங்கியுள்ளது.

☞ **'எல்டர்லைன்' (ELDERLINE)** என்ற பெயரில் முதியோருக்கான தேசிய அளவிலான கட்டணமில்லா ஹெல்ப்லைன் எண்ணாக "14567" என்ற எண்ணை மத்திய சமூக நீதி அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்த சேவையானது டாடா டிரஸ்ட் (Tata Trusts) மற்றும் என்.எஸ்.இ. பவுண்டேசன் (NSE foundation) ஆகியவற்றின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

இந்த வசதி, தமிழ்நாடு, உ.பி., ம.பி., ராஜஸ்தான், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் அண்மையில் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. தெலுங்கானாவில், இந்த வசதி ஒரு வருடத்திற்கும் மேலாக செயல்பட்டு வருகிறது.

2021 மே மாத இறுதிக்குள் இந்த வசதி எல்லா மாநிலங்களிலும் செயல்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய சமூக நீதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் தேதியன்று இந்த எல்டர்லைன் உதவி எண் வசதி தொடங்கப்பட்டுள்ளது.

☞ **மலைவாழ் மக்களுக்கான பள்ளிகளில் டிஜிட்டல் கல்வியை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் மலைவாழ் மக்கள் விவகார அமைச்சகம் மற்றும் மைக்ரோசாஃப்ட் (Microsoft) நிறுவனம் இடையே 17 மே 2021 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம்** செய்யப்பட்டது.

☞ **கோவிஷீல்டு தடுப்பூசியின் முதல் மற்றும் 2வது டோஸ்களுக்கான இடைவெளியை 12-16 வாரங்களாக நீட்டிக்கும்படி டாக்டர் என்.கே.அரோரா தலைமையிலான கொவிட் செயற் குழு பரிந்துரைத்துள்ளது.**

☞ **15 மே 2021 வரையில் இந்திய ரயில்வே, 6000 ரயில் நிலையங்களில் வைஃபை வசதிகளை நிறுவியுள்ளதாக அறிவித்துள்ளது**.மே 15, 2021 அன்று ஜார்க்கண்ட் மாநிலத்தின் ஹசாரிபாக் மாவட்டத்தின் ஹசாரிபாக் நகர் ரயில் நிலையம் இந்த சேவையைப் பெற்றுள்ள 6000 வது இரயில் நிலையமாகும்.

**கூ.தக.** : நாட்டிலேயே முதன்முறையாக கடந்த 2016-ஆம் ஆண்டு மும்பையில் இரயில் நிலையங்களில் வைஃபை வசதி சேவை தொடங்கப்பட்டது.

**தமிழகத்தில் இதுவரை 418 ரயில் நிலையங்களில்** இந்த சேவை வழங்கப்பட்டுள்ளது.

☞ **'தேசிய இடர் மேலாண்மை குழுவின்' (National Crisis Management Committee (NCMC)) தலைவர் - மத்திய கேபினட் செயலர் (Cabinet Secretary)**

**கூ.தக.** : தற்போதைய கேபினட் செயலராக ராஜிவ் கவுபா (Rajiv Gauba) உள்ளார்.

☞ **'சக்கரங்களின் மேல் ஆக்சிஜன்' ('Oxygen on Wheels')** என்ற பெயரில் நடமாடும் ஆக்சிஜன் தயாரிப்பு ஆலைகளை விசாகப்பட்டணத்தை மையமாகக் கொண்ட இந்திய கடற்படையின் கிழக்கு கடற்படை கமாண்ட் தயாரித்துள்ளது.

☞ **ஐஎன்எஸ் ராஜ்புத் (INS Rajput) போர்க்கப்பல் இந்திய கடற்படையிலிருந்து 21 மே 2021 அன்று விடுவிக்கப்பட்டது.**

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட கஷின் ரகத்தைச் சேர்ந்த இந்த போர்க்கப்பல், இந்திய கடற்படையில் கடந்த 1980ம் ஆண்டு மே மாதம் 4ம் தேதி சேர்க்கப்பட்டது.

இந்திய கடற்படையில் 41 ஆண்டுகள் பணியாற்றிய இந்த போர்க்கப்பல் கடற்படையின் மேற்கு மற்றும் கிழக்கு மண்டலத்தில் திறம்பட பணியாற்றியுள்ளது. இந்திய அமைதிப்படை, இலங்கை கடல் பகுதியில் ரோந்து பணிகளில் இந்த கப்பல் ஈடுபட்டுள்ளது.

☞ **கரோனா நோயாளிகள் முழுமையாக குணமடைந்த 3 மாதங்களுக்குப் பிறகே தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும்** என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

☞ **சர்வதேச சந்தையில் பாஸ்பாரிக் அமிலம் மற்றும் அமோனியாவின் விலை உயர்வையடுத்து இந்தியாவில் டி.ஏ.பி. உரம் ரூ.1,200-ல் இருந்து ரூ.1,900 (ரூ.500 மானியம் போக) ஆக சமீபத்தில் உயர்த்தப்பட்டது.** இதனால் விவசாயிகள் பெரும் அவதியடைந்ததுடன், எதிர்க்கட்சிகளும் இந்த நடவடிக்கையை கண்டித்து இருந்தன. இதைத்தொடர்ந்து டி.ஏ.பி.க்கான மானியத்தை ரூ.500-ல் இருந்து ரூ.1,200 ஆக உயர்த்தி விவசாயிகளுக்கு பழைய விலைக்கே (ரூ.1,200) டி.ஏ.பி. உரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

☞ **கரோனா தொற்று பாதிப்பு இருப்பதை வீட்டிலேயே உறுதி செய்யும் வகையில் ஆன்டிஜென் ரேபிட் டெஸ்ட் பரிசோதனை கருவியின் பயன்பாட்டுக்கு முதல் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் அனுமதி அளித்துள்ளது**. கரோனா தொற்று பாதிப்பு இருப்பதை விரைந்து கண்டறியும் ரேபிட் ஆன்டிஜன் டெஸ்ட் என்ற கருவியை மகாராஷ்டிரம் மாநிலம் புனேவைச் சேர்ந்த **மைலேப் டிஸ்கவரி சொல்யூஷன்ஸ் லிமிடெட் நிறுவனம் உருவாக்கியுள்ளது**. ஒரு பரிசோதனை கருவியின் விலை ரூ.250 ஆகும் 15 நிமிடங்களுக்குள் பரிசோசனை முடிவுகளை தெரிந்துகொள்ள முடியும். இந்த கருவியின் மூலம் மூக்கில் உள்ள சளி மாதிரியை எடுத்து தொற்று இருப்பதை வீட்டிலேயே உறுதி செய்யும் வகையில் இந்த கருவி உருவாக்கப்பட்டுள்ளது.

☞ **மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுக்காக ஆறு மாத கால, சமுதாய அடிப்படையிலான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தை அரசு 19-5-2021 அன்று அறிமுகப்படுத்தியது.** மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் தாவர்சந்த் கெலாட் காணொலி மூலம் இதனை தொடங்கி வைத்தார்.

☞ **'ஃபேக்பஸ்டர்' கருவி** : பஞ்சாப் மாநிலத்தின் ரோபோரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் மற்றும் ஆஸ்திரேலியாவின் மோனாஷ் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களும் இணைந்து ஆன்லைன் கருத்தரங்கங்களில் எவருக்கும் தெரியாமல் நுழையும் போலி நபர்களைக் கண்டறிவதற்காக 'ஃபேக்பஸ்டர்' என்று அழைக்கப்படும் தனித்துவம் வாய்ந்த கண்டறிவியை உருவாக்கியுள்ளனர்.

☞ **ஹைதராபாத்தில் உள்ள பார்மா நிறுவன மான பையோலாஜிகல்-இ நிறுவனத்துடன் இணைந்து தடுப்பூசியை தயாரிக்க ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் ஒப்பந்தம்** செய்துள்ளது.

☞ **பிரதம மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் மே மற்றும் ஜூன் ஆகிய இரண்டு மாதங்களில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உள்ள சுமார் 79.39 கோடி பயனாளிகளுக்கு மாதத்திற்குக் கூடுதலாக ஒருவருக்கு 5 கிலோ உணவு தானியங்கள் இலவசமாக வழங்கப்படும்** என மத்திய அரசு அறிவித்துள்ளது.

☞ **இந்திய மருத்துவ சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் கேகே அகர்வால்** கொரோனா வைரஸ் பாதிப்பால் உயிரிழந்தார்.

☞ **இந்திய மக்கள்தொகையில் 1.8 சதவீதம் பேருக்கே கரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது**; 98 சதவீதத்துக்கும் மேற்பட்டோரை கரோனா பாதிக்கவில்லை என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் கூறியுள்ளது.

☞ **அனைத்து மாநிலங்களுக்கும் பேரிடர் நிவாரண நிதியாக ரூ.23 ஆயிரம் கோடியை மத்திய அரசு ஒதுக்கி உள்ளது.** கடந்த ஆண்டை போலவே, இந்தத் தொகையில் 50 சதவீதத்தை கரோனா தடுப்புப் பணிகளுக்கு செலவிட மாநிலங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

**கூ.தக.** : நாட்டில் புயல், வெள்ளம் போன்ற பேரி டர்களின்போது, மக்களின் வாழ்வா தாரத்துக்கும், சேதமடைந்த பகுதிகளில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளவும் மாநில பேரிடர் நிவாரண நிதியத்துக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கி வருகிறது. அதன்படி, கடந்த ஆண்டு மாநிலங்களுக்கு ரூ.29 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டது. அந்தத் தொகையில் 50 சதவீதத்தை கரோனா தடுப்புப் பணிகளுக்கு செலவிட அனுமதி வழங்கப்பட்டது.

☞ **இந்தியாவில் கரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ளும் 10 லட்சம் பேரில் 0.61 சதவீதம் பேருக்கு மட்டுமே பக்கவிளைவுகள் ஏற்படுவதாக தேசிய ஆய்வுக் குழு தெரிவித்துள்ளது**.

☞ **மத்திய அரசின் கரோனா தடுப்பு ஆலோசனைக் குழுத் தலைவா் பொறுப்பில் இருந்து ஷாஹித் ஜமீல் 16-5-2021 அன்று ராஜிநாமா செய்தார்.**

கடந்த டிசம்பா் 2020 மாதம் இந்திய சாா்ஸ் கரோனா தீநுண்மி மரபியல் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. இந்த அமைப்பு கரோனா தீநுண்மியின் பல்வேறு வகைகளை கண்டறியவும், கரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்கான விஞ்ஞானபூர்வ ஆலோசனைகளை வழங்கவும் மத்திய அரசால் அமைக்கப்பட்டது.

☞ **ரஷியாவின் ஸ்புட்னிக்-வி கரோனா தடுப்பூசியை இந்தியாவில் உற்பத்தி செய்வதற்கு டாக்டா் ரெட்டீஸ் நிறுவனத்துடன் கா்நாடக மாநிலத்தைச் சோ்ந்த ஷில்பா மெடிகோ் நிறுவனம் ஒப்பந்தம்** செய்துள்ளது.

☞ **கருப்பு பூஞ்சை நோய் (ம்யூகோர்மைகோசிஸ்)** : கரோனா வைரஸ் பாதிப்பால் சிகிச்சை பெறுவோர் அல்லது கரோனாவில் இருந்து மீண்டவர்கள் அதிகப்படியான ஸ்டீராய்டுமருந்துகள் எடுத்துக் கொண்டதன்காரணமாக நோய் எதிர்ப்பு சக்திகுறைந்து அவர்களை கருப்புபூஞ்சை நோய் (மியூகோர்மைகோசிஸ்) தாக்குவதாக கூறப்படுகிறது.இந்த நோய் பாதிப்பு அதிக உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடியது. தலைவலி, காய்ச்சல், சைனஸ் மண்டலத்தில் பாதிப்பு, கண்களுக்கு கீழ் வலி மற்றும் பகுதியளவில் பார்வை குறைபாடு ஏற்படுவது போன்றவை இந்த பூஞ்சைபாதிப்புக்கு முக்கிய அறிகுறியாகும்.

**கூ.தக .** : கருப்பு பூஞ்சை நோய்க்கெதிரான மருந்து - ஆம்போடெரிசின் - பி (Amphotericin-B)

☞ **2-டியாக்சி-டி-குளுக்கோஸ் (2-deoxy-D-glucose (2-DG))** : கோவிட்-19 தொற்றுக்கு எதிராக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான டிஆர்டிஓ ( Defence Research and Development Organisation (DRDO)) **வின் ஆய்வகமான அணு மருந்தியல் மற்றும் அது சார்ந்த அறிவியல் நிறுவனம்** (Institute of Nuclear Medicine and Allied Sciences (INMAS)), **ஹைதராபாத்திலுள்ள டாக்டர் ரெட்டிஸ் லேபாரட்டரிஸ் நிறுவனத்துடன்** (Dr Reddy's Laboratories (DRL), Hyderabad) **இணைந்து உருவாக்கியுள்ள** 2-டியாக்சி-டி-குளுக்கோஸ் (2-deoxy-D-glucose (2-DG)) **என்ற தடுப்புமருந்தின் அவசரகால பயன்பாட்டிற்கு இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு கடந்த மே** 1-**ஆம் தேதி அனுமதி அளித்தது**.

இந்த மருந்தை உள்நாட்டில் அதிக அளவில் தயாரித்து விநியோகிக்க முடியும். கரோனாவால் தீவிரமாக பாதிப்படைந்தவர்களும் இந்த மருந்தால் பலனடைவர்.பொடியாகக் கிடைக்கும் 2-டிஜி மருந்தை நீரில் கரைத்து குடிக்கலாம். உடலில் கரோனா தீநுண்மி பரவலை இந்த மருந்து பெருமளவில் கட்டுக்குள் கொண்டு வரும்.

☞ **பிரதமர் கிசான் திட்டத்தின் கீழ் 8-வது தவணை நிதியை வழங்கும் திட்டத்தை, பிரதமர் நரேந்திர மோடி 14-5-2021 அன்று தொடங்கி வைத்தார்.**

**கூ.தக.** :பிரதமர் கிசான் திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு 4 மாதங்களுக்கு ஒரு முறை ரூ. 2000 வீதம் மூன்று தவணையாக ஆண்டுக்கு மொத்தம் ரூ. 6000 நிதியுதவி வழங்கப்படும். இந்த நிதி, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக பரிமாற்றம் செய்யப்படும்.

இதன்படி 9.5 கோடிக்கும் அதிகமான விவசாய குடும்பங்களுக்கு சுமார் ரூ. 19,000 கோடி அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக பரிமாற்றம் செய்யப்படும்.

☞ **2 வயது முதல் 18 வயதுள்ள பிரிவினருக்கு கோவாக்சின் கரோனா தடுப்பு மருந்தை செலுத்தி 2-வது மற்றும் 3-வது கிளினிக்கல் பரிசோதனை நடத்திக்கொள்ள பாரத் பயோடெக் நிறுவனத்துக்கு மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பு (சிடிஎஸ்சிஓ) அனுமதி** வழங்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

☞ **ஆந்திர பிரதேசத்தில் கொரோனா பாதிப்புக்கு பெற்றோரை இழந்து ஆதரவற்ற ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.10 லட்சம் டெபாசிட்** செய்யப்பட உள்ளதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

☞ **'கோவிட் - 19 தடுப்பூசிகளுக்கான உலக அளவிலான கூட்டமைப்பின்' (Global COVAX Alliance) உறுப்பினராகும் இந்தியாவின் முதல் மாநிலம் எனும் பெருமைய பஞ்சாப் மாநிலம்** பெற்றுள்ளது.

☞ **இந்தியாவின் முதல் ஆற்றுவளி பாலம் கர்நாடகாவில் அமைக்கப்பட்டுள்ளது.** நிதி அயோக்கின் உதவியுடனான இந்த திட்டத்தில் மாநில அரசும் தனது பங்களிப்பை வழங்கும்.

☞ **ரஷியாவின் கொரோனா தடுப்பூசியான ஸ்புட்னிக்-வி தடுப்பூசியின் விலை இந்தியாவில் ரூ. 995.40 (5% ஜிஎஸ்டி உள்பட) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது**. இந்தியாவில் ஐதராபாத்தைச்

சேர்ந்த டாக்டர் ரெட்டீஸ் நிறுவனம் இந்த தடுப்பூசியை உற்பத்தி செய்கிறது. ஸ்புட்னிக்-வி தடுப்பூசி நாட்டிலேயே முதன் முறையாக ஐதராபாத்தில் முதல் கட்டமாக 14-5-2021 அன்று போடப்பட்டது.

**கூ.தக.** : இந்தியாவில் கோவிஷீல்ட், கோவேக்ஸின் என இரண்டு இந்தியத் தயாரிப்பு தடுப்பூசிகள் பயன்பாட்டில் இருக்கும் நிலையில் மூன்றாவதாக ரஷியாவின் ஸ்புட்னிக்-வி தடுப்பூசியும் தற்போது பயன்பாட்டுக்கு விடப்பட்டுள்ளது.

☞ **பிராணா, வாயு, ஸ்வாஸ்தா என்ற பெயர்களில் மிகக் குறைந்த விலையில் 3 வகையான வென்டிலேட்டர்களை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்துள்ளது.**

☞ **இந்திய , வரலாற்றில் முதன்முறையாக இந்திய ராணுவத்தின் அதிகாரி நிலை பதவி அல்லாத 'காலாட்படை போலீஸ்' பிரிவில் 83 பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.**

☞ **டைம்ஸ் குழுமத் தலைவர் இந்து ஜெயின் (84), கரோனா தொற்று பாதிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட உடல்நல குறைவால் புது தில்லியில் காலமானார்.**

☞ **இந்தியாவில் செல்லிடப்பேசி வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 2021 பிப்ரவரி இறுதி நிலவரப்படி 116.77 கோடியாக அதிகரித்துள்ளது** என இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்காற்று ஆணையம் (டிராய்) தெரிவித்துள்ளது.

செல்லிடப்பேசி சேவையில் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களின் பங்களிப்பு 89.57 சதவீத அளவுக்கு உள்ளது. அதேசமயம், பொதுத் துறை நிறுவனங்களான பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் ஆகியவற்றின் சந்தை பங்களிப்பானது 10.43 சதவீத அளவுக்கு மட்டுமே உள்ளது.

செல்லிடப்பேசி சந்தாதாரர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ரிலையன்ஸ் ஜியோ 35.54 சதவீத பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளது. இதைத் தொடர்ந்து பாரதி ஏர்டெல் 29.83 சதவீத பங்களிப்பையும், வோடஃபோன் ஐடியா 24.20 சதவீத பங்களிப்பையும் வைத்துள்ளன.

☞ **வெளிநாடுவாழ் இந்தியர்கள் 2020-ஆம் ஆண்டில் சுமார் ரூ.6.13 லட்சம் கோடியை தாய்நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளதாக உலக வங்கி** தெரிவித்துள்ளது.

☞ **'ஆபரேசன் கோ-ஜீட்' ( operation "CO-JEET" )** என்ற பெயரில் நாட்டின் கோவிட்-19 தொற்று தடுப்பு பணிகளில் மத்திய அரசுக்கு உதவுவதற்கான நடவடிக்கையை இந்திய இராணுவம் மேற்கொண்டுள்ளது.

☞ **பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் மையம் (ஐ.ஐ.எஸ்.சி.) கரோனா தடுப்பூசி ஒன்றை தயாரித்துள்ளது.**

☞ **"டவ்-தே புயல்"** :அரபிக்கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ள நிலையில் 'டவ்-தே' எனும் புயலாக உருப்பெற்று, 17-5-2021 அன்று இரவு கரையைக் கடந்தது. இந்த புயல் காரணமாக கேரளம், கர்நாடகம், கோவா,

மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களிலும் டாமன்-டையு மற்றும் தாத்ரா-நாகர் ஹவேலி யூனியன் பிரதேசத்திலும் கனமழையும் பலத்த காற்றும் வீசியது.

**கூ.தக.** : 'டவ்-தே'புயலுக்கு மியான்மர் நாடு பெயர்சூட்டியுள்ளது. 'டவ்-தே'என்பது மியான்மர் நாட்டில் உள்ள ஒரு பல்லி இனம் ஆகும்.

☞ **கோவிஷீல்டு தடுப்பூசியின் முதல் டோசுக்கும், இரண்டாவது டோசுக்கும் இடையேயான இடைவெளியை 16 வாரங்களாக நீட்டித்து மத்திய சுகாதார அமைச்சகம் அறிவிப்பு** வெளியிட்டுள்ளது.

☞ **பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவேக்சின் தடுப்பூசி உற்பத்தியை ஒரு மாதத்திற்கு 10 கோடி என்ற அளவுக்கு அதிகரிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.**

☞ **கரோனா தொற்று நோயாளிகளுக்கு தேவைப்படும் ஆக்ஸிஜன் பிரச்னைக்கு தீர்வு காண உச்சநீதிமன்றம் அமைத்துள்ள தேசிய அளவிலான 12 பேர் கொண் வல்லுநர் குழுவில் வேலூர் சிஎம்சி மருத்துவமனையைச் சேர்ந்த இரு மருத்துவ பேராசிரியர்கள் ககந்தீப்காங், ஜெ.வி. பீட்டர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.**

☞ **அஸ்ஸாமின் புதிய முதல்வராக பாஜக மூத்த தலைவர் ஹிமந்த விஸ்வ சர்மா** பதவியேற்றுக் கொண்டார்.

☞ **'மாநிலங்களுக்கான பகிர்வு' என்ற தலைப்பின் கீழ் கரோனா தடுப்புத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட ரூ.35,000 கோடி நிதியை மத்திய அரசு பயன்படுத்துவதற்கு எந்தவிதத் தடையுமில்லை என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது**.

**கூ.தக.** : மத்திய அரசு தாக்கல் செய்திருந்த 2021-22-ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் ரூ.35,000 கோடி கரோனா தடுப்பூசிக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்காக நாடாளுமன்றத்தில் நிதி கோரும் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது. அத்தீர்மானமானது 'மாநிலங்களுக்கான பகிர்வு' என்ற தலைப்பில் தாக்கல் செய்யப்பட்டு, நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

☞ **கரோனா பாதிப்பின் காரணமாக சிறைவாசிகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறும், தகுதிவாய்ந்த சிறைவாசிகளைப் பிணையில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மாநில அரசுகளுக்கு 07.05.2021 அன்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

☞ **கரோனா சிகிச்சைக்காக நோயாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும் ரூ. 2 லட்சம் வரையிலான மற்றும் அதற்கு அதிகமான கட்டணத்தையும் ரொக்கமாகவே வசூலித்துக்கொள்ள மருத்துவமனைகளுக்கு வருமான வரித் துறை அனுமதி அளித்துள்ளது**.

☞ **இந்திய தேர்தல் ஆணையத்துக்காகன உச்சநீதிமன்றத்தில் ஆஜராகி வந்த வழக்குரைஞர்கள் குழுவிலிருந்து வழக்குரைஞர் டி.மோஹித் ராம் ராஜிநாமா** செய்துள்ளார்.

☞ **1 ஜீன் 2021 முதல் தனித்த ஊனமுற்றோர் ஐடி போர்ட்டலை (Unique Disability ID Portal (UDID Portal) - (www.swavlambancard.gov.in) )** பயன்படுத்தி மட்டுமே ஆன்லைன் முறை மூலம் ஊனமுற்றோர்

சான்றிதழை வழங்குமாறு, அனைத்து மாநில / யூனியன் பிரதேச அரசாங்கங்களுக்கும் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டு துறை (Department of Empowerment of Persons with Disabilities (DEPwD)) கட்டளையிட்டுள்ளது.

☞ **சமூக பாதுகாப்பு விதிகள் 2020 (Social Security Code, 2020) இன் பிரிவு 142 ஐ மத்திய தொழிலாளர் அமைச்சகம் அறிவித்துள்ளது.**

**இத்த பிரிவு சமூக பாதுகாப்பு திட்டங்களின் பயனர்களின் ஆதார் விவரங்களை சேகரிக்க மத்திய தொழிலாளர் அமைச்சகத்திற்கு உரிமை வழங்குகிறது.**

☞ **பூனே மெட்ரோ ரெயில் திட்டத்திற்காக (Pune Metro Rail project) 150 மில்லியன் யூரோ கடனுதவிக்கான ஒப்பந்தம் இந்திய அரசு மற்றும் ஐரோப்பிய முதலீட்டு வங்கி (European Investment Bank (EIB)) இடையே 7-5-2021 அன்று செய்துகொள்ளப்பட்டது.**

☞ **இந்திய உணவுக் கழகத்தின் (Food Corporation of India) மண்டல அலுவலகங்கள் (Divisional Offices) மகாராஷ்டிராவில் உள்ள அவுரங்காபாத் மற்றும் அமராவதியில் இருக்கும் உடனடியாக செயல்பட தொடங்கும்** என்று மத்திய இணை அமைச்சர் திரு ராவ் சாகேப் டான்வே 10-5-2021 அன்று அறிவித்தார்.

**கூ.தக.** : புது தில்லியைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள இந்திய உணவுக் கழகத்திற்கென 5 மண்டல அலுவலகங்கள் (Zonal Offices (East, West, South, North, North East) மற்றும் 26 பிராந்திய அலுவலகங்கள் (Regional Offices) செயல்பட்டுவருகின்றன.

<u>FCI மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமையிடங்கள்</u>

Zonal Office North: Noida.

Zonal Office East: Kolkata.

Zonal Office West: Mumbai.

Zonal Office North-East: Guwahati.

Zonal Office South: Chennai.

☞ **கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளிலும், குடிநீர் குழாய் இணைப்பு வழங்கியதன் மூலம், வீட்டுக்கு வீடு குடிநீர் குழாய் இணைப்பு இருக்கும் யூனியன் பிரதேசமாக புதுச்சேரி 10-5-2021 அன்று மாறியுள்ளது**. இதன் மூலம் கோவா, தெலங்கானா, மற்றும் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளுக்கு அடுத்தபடியாக, ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் குடிநீர் குழாய் இருக்கும் 4வது மாநிலம்/யூனியன் பிரதேசமாக புதுச்சேரி மாறியுள்ளது.

**கூ.தக.** : 15 ஆகஸ்டு 2019 ல் பிரதமர் மோடி அவர்களால் தொடங்கப்பட்ட ஜல் ஜீவன் இயக்கத்தின் முக்கிய இலக்கு 2024-ஆம் ஆண்டுக்குள் கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் தண்ணீர் குழாய் இணைப்பை உறுதி செய்வதாகும்.

☞ **கொவிட் நோயாளிகளுக்கு பல மூலிகைகளின் கலவை மருந்தான ஆயுஷ் 64 ( AYUSH 64) மற்றும் சித்த மருத்துவத்தின் கபசுரக் குடிநீரை (Kabasura Kudineer) நாடு முழுவதும் வழங்கும் மாபெரும் திட்டத்தை ஆயுஷ் அமைச்சகம் 7-5-2021 அன்று தொடங்கியது**.

☞ **கரோனாவை எதிர்த்துப் போராடி வரும் இந்தியாவுக்கு ரூ.110 கோடியை நிவாரணத் தொகையாக வழங்குவதாக ட்விட்டர் நிறுவனம்** அறிவித்துள்ளது.

☞ **புதுச்சேரி மாநிலத்தின் முதல்வராக 4-வது முறையாக என்.ஆர்.காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி 7-5-2021 அன்று பதவியேற்றார்**.

☞ **இந்தியாவின் முதல் மாநிலமாக டிஜிட்டல் முறையில் ஆன்லைன் வெள்ள அபாய முன்னெச்சிரிக்கை அறிவிப்பு முறைமையை (Online Flood Reporting System) அஸ்ஸாம் மாநிலம்** யுனிசெஃப் ஆகியவை இணைந்து உருவாக்கியுள்ளன.

☞ **இந்தியாவின் முதல் மின்சாரத்தினால் இயங்கும் டிராக்டர் மத்திய பிரதேசத்தின் புட்னியிலுள்ள (Budni) மத்திய வேளாண் இயந்திர பயிற்சி மற்றும் சோதனை நிறுவனத்தில்** (Central Farm Machinery Training and Testing Institute (CFMTTI)) வெற்றிகரமாக சோதிக்கப்பட்டுள்ளது.

☞ **கொவிட்-19-க்கு எதிரான நாட்டின் போருக்கு ஆதரவளிக்கவும், சமுத்திர சேது II செயல்பாட்டின் ஒரு பகுதியாகவும், கொல்கத்தா, கொச்சி, தல்வார், தாபர், திரிகண்ட், ஜலாஷ்வா மற்றும் ஐராவத் ஆகிய 7 இந்திய கடற்படைக் கப்பல்கள்**, பல்வேறு நாடுகளில் இருந்து மருத்துவ ஆக்சிஜன் நிரப்பப்பட்ட கிரையோஜெனிக் கொள்கலன்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொண்டு வருவதற்காக பணியமர்த்தப்பட்டுள்ளன.

☞ **கற்பிணி பெண்களுக்கான தேசிய அளவிலான வாட்சப் உதவி எண்ணை தேசிய பெண்கள் ஆணையம் அறிவித்துள்ளது**. இதன் மூலம் **9354954224 என்ற வாட்சப் எண்ணைத் தொடர்பு** கொண்டு, கற்பிணிப் பெண்கள் மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.

☞ **நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியை (Members of Parliament Local Area Development Scheme) அரசு மருத்துவமனைகளில் ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகளை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி** வழங்கியுள்ளது.

☞ **"MACS 1407" என்ற பெயரில் புதிய சோயாபீன்ஸ் வகையினை பூனேவிலுள்ள அகர்கார் ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள** (Agharkar Research Institute of Pune) ஆராய்ச்சியாளர்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கவுண்சிலுடன் (Indian Council of Agricultural Research) இணைந்து உருவாக்கியுள்ளனர். இந்த உயர் தர சோயாபீன்ஸ் ரகம் ஒரு ஹெக்டேருக்கு 39 குவிண்டால் விளைச்சலை வழங்கவல்லதாகும்.

☞ **சீக்கிய குரு குரு தேஜ் பகதூர் (Guru Tegh Bahadur) அவர்களின் 400 வது பிறந்த தினம் 1 மே 2021** அன்று கொண்டாடப்பட்டது.

**கூ.தக.** : சீக்கிய குரு ஹர்கோபிந்த் சாஹிப்பின் இளைய மகனான குரு தேஜ் பகதூர் 1621 ஆம் ஆண்டு அம்ரிஸ்தரில் பிறந்தார்.

☞ **மாநில / யூனியன் பிரதேச தேர்தல் முடிவுகள் மே 2021**

**அஸ்ஸாம்** : மொத்தமுள்ள 126 சட்டமன்ற தொகுதிகளில் 60 தொகுதிகளை பாரதிய ஜனதா கட்சி வென்று முதல்வராக ஹிமாந்தா பிஸ்வா சர்மா (Himanta Biswa Sarma) பொறுப்பேற்றுள்ளார்.

**மேற்கு வங்காளம்** : மொத்தமுள்ள 294 சட்டமன்ற தொகுதிகளில் 212 தொகுதிகளை வென்று திரிணாமூல் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று மம்தா பானர்ஜி முதல்வராக பொறுப்பேற்றுள்ளார்.

**கேரளம்** : மொத்தமுள்ள 140 சட்டமன்ற தொகுதிகளில் 62 தொகுதிகளை வென்று இந்திய கம்யூனிஸ்டு ( CPI (M)) கட்சியைச் சேர்ந்த பிணராயி விஜயன் முதல்வராக பொறுப்பேற்றுள்ளார்.

**புதுச்சேரி** : மொத்தமுள்ள 30 சட்டமன்ற தொகுதிகளில் 10 தொகுதிகளை வென்று என்.ஆர்.காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ந. ரங்கசாமி ( N. Rangaswamy) முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

**முதலமைச்சர் பற்றிய அரசியலமைப்பு சரத்துகள்**

சரத்து 163: முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் குழு ஆளுநருக்கு ஆலோசனை வழங்கும்

சரத்து 164: ஆளுநர் முதலமைச்சரை நியமிக்கிறார். அமைச்சர்களை முதலமைச்சரின் ஆலோசனைப்படி நியமிக்கிறார்.

சரத்து 166: மாநில அரசின் செயல்பாடுகள் (Conduct of Business of the State Government)

சரத்து 167: முதலமைச்சரின் பணிகள் (Duties of Chief Minister)

☞ **கரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட இந்திய ஆணழகன் மும்பை நவி பகுதியைச் சேர்ந்த ஜகதீஷ் லாட் பலியானார்.**

☞ **நாட்டில் முதன்முறையாக ஹைதரா பாத் நேரு தேசிய மிருக காட்சி சாலையில் 8 சிங்கங்களுக்கு கரோனா வைரஸ் தொற்று உறுதி** செய்யப் பட்டுள்ளது.

☞ **ஆயுஷ்-64 மூலிகை மருந்து** : கடந்த 1980-ஆம் ஆண்டு மலேரியாவின் சிகிச்சைக்காக உருவாக்கப்பட்ட ஆயுஷ்-64 என்ற பல்வேறு மூலிகைகள் கலந்த மருந்து, கோவிட்-19 சிகிச்சைக்கு ஏற்றவாறு தற்போது மாற்றி உருவாக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது.

☞ **அடுத்த 2 ஆண்டுகளில் 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள சாலைகளை அமைக்கும் இலக்கை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.** அதன்படி, 2021-22 நிதியாண்டில் நாளொன்றுக்கு 40 கி.மீ தூரத்தில் நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்கும் இலக்கு மற்றும் சாலைத் துறையில் 100% அந்நிய நேரடி முதலீட்டை மத்திய அரசு அனுமதித்துள்ளது.

☞ **இந்திய ராணுவம் தனது முதல் பசுமை சூரிய ஆற்றல் உற்பத்தி நிலையத்தை (Green Solar Energy harnessing plant) சிக்கிமில் தொடங்கியுள்ளது**. 16,000 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளதும், 56 KVA மின் உற்பத்தி திறன் கொண்டதுமான இந்த சூரிய ஆற்றல் உற்பத்தி நிலையம் ஐ.ஐ.டி மும்பையின் ஒத்துழைப்புடன்

☞ **'வானடியம்' (Vanadium) எனும் தனிமம் இந்தியாவில் முதல் முறையாக அருணாச்சல பிரதேசத்தில் ஜனவரி 2021 ல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது**. 'V' என்ற குறியீட்டினால் குறிக்கப்படும், சில்வர் நிறமுடைய இந்த தனிமமானது அணு உலைகளில் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

**கூ.தக.** : உலகளவில் இந்தியா ஆண்டொன்றிற்கு உலகில் உற்பத்தி செய்யப்படும் 4% வானடியத்தைப் பயன்படுத்தி வருகிறது.

வானடியம் உற்பத்தியில் உலக அளவில் முஹ்டல் மூன்று இடங்களை முறையே சீனா, ரஷியா மற்றும் தென் ஆப்பிரிக்கா நாடுகள் உள்ளன.

☞ **பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்ட பயோ டீசலின் (used cooking oil-based biodiesel) பயன்பாட்டை மத்திய பெட்ரோலிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் 4-5-2021 அன்று தொடக்கி வைத்தார்.**

☞ **"சூத்ரா மாதிரி" (SUTRA Model) என்ற பெயரில் கோவிட்-19 பெருந்தொற்றின் இரண்டாம் அலையினை கணிப்பதற்கான யுக்தியை இந்திய அரசு கையாண்டு வருகிறது.** இந்த 'சூத்ரா' (SUTRA - Susceptible, Undetected, Tested (positive), and Removed Approach) மாதிரியை ஐ.ஐ.டி. கான்பூர் மற்றும் ஐ.ஐ.டி. ஹைதராபாத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் உருவாக்கியுள்ளனர்.

☞ **கோவிட்-19 நோய் தொடர்பான மருந்துக்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு முழுவதுமாக சர்வதேச ஜி.எஸ்.டி. வரி விலக்கு (IGST) வழங்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த வரி விலக்கு 30 ஜீன் 2021 வரையில் அமலில் இருக்கும்**.

☞ **மகாரஷ்டிர மாநிலத்தில், மராத்திய சமூகத்திற்கு கல்வி, வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்க வழிவகை செய்ய 2018-ல் அம்மாநில அரசு இயற்றிய இடஒதுக்கீட்டு சட்டத்தை செல்லாது என உச்சநீதிமன்றத்தின் ஐவர் அரசியலமைப்பு அமர்வு 5 மே 2021 அன்று தீர்ப்பு** வழங்கியுள்ளது.

**கூ.தக.** : மராட்டிய மாநிலத்தில் அமைக்கப்பட்ட கெய்க்வாட் ஆணையத்தின் (M G Gaikwad Commission) பரிந்துரையின் படி, மராத்தா பிரிவினருக்கு, 16 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் வகையில், சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய பிரிவினருக்கான இடஒதுக்கீட்டு சட்டம், 2018-ல் அறிமுகம் செய்யப்பட்டது. ஏற்கனவே, 50 சதவீத இடஒதுக்கீட்டு உச்சவரம்பை எட்டியுள்ள நிலையில், கூடுதல் ஒதுக்கீடு வழங்குவதை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்கை உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு விசாரித்தது. இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், மராத்தா சமூகத்தினருக்கான இட ஒதுக்கீட்டை ரத்து செய்துள்ளது.

☞ **கரோனா சிகிச்சை பணியாற்றியபோது அத்தொற்றால் பாதிக்கப்பட்டுஉயிரிழந்த மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா 25 லட்சம் ரூபாய் தொகையை இழப்பீடாக மத்திய அரசு அறிவித்துள்ளது.**


**TNPSC குரூப் 4, VAO 2021 TEST BATCH**

**முழு பாடத்திட்டத்தையும் குறுகிய காலத்தில் படித்து பயிற்சி செய்வதற்கான மிகச்சிறந்த Study Plan உடன் ஆன்லைன் தேர்வு வகுப்புகள்.**

**NEW ONLINE TEST BATCH**

**STARTS FROM 6-6-2021**

**தமிழ் (120 தேர்வுகள்) & English (100 Tests) Mediums**

**ஒவ்வொரு தேர்விலும் 100 வினாக்கள் | முதல் தேர்வை இலவசமாகப் பயிற்சி செய்யுங்கள்**

**www.portalacademy.in | 8778799470**


## வெளிநாட்டு உறவுகள்

☞ **ஐ.நா.,பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் இரண்டாவது முறையாக அப்பதவியில் தொடர இந்தியா ஆதரவு** தெரிவித்துள்ளது.

**கூ.தக.** : போர்ச்சுகல் பிரதமராயிருந்த, அன்டோனியோ குட்டரஸ், 2017ல், ஐ.நா., பொதுச் செயலாளராக பதவியேற்றார். அவரது பதவிக்காலம் இந்தாண்டு, டிசம்பர் 31ல் முடிவடைகிறது.

☞ **இணையவழியில் நடைபெற்ற** 33வது **காமன்வெல்த் நாடுகளின் சுகாதாரத்துறை அமைச்சர்களின் மாநாட்டிற்கு** (33rd Conference of Health Ministers of Commonwealth Countries) **இந்திய சுகாதரத்துறை அமைச்சர் ஹர்ஸ்வர்த்தன் அவர்கள் தலைமையேற்று** நடத்தினார்.

☞ **இந்தியா, இஸ்ரேல் நாடுகளுக்கு இடையேயான வேளாண் கூட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக வளர்ந்து வரும் இரு தரப்பு கூட்டணி மற்றும் இரு நாட்டு உறவுகளில் வேளாண்மை மற்றும் நீர் துறைகளை மையப்படுத்தி அங்கீகாரம்** வழங்கி, விவசாய ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான மூன்று வருட (2021-2023) செயல் திட்ட ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் 24 மே 2021 அன்று கையெழுத்திட்டுள்ளன.

இந்தியாவும் இஸ்ரேலும் ஏற்கெனவே இந்திய-இஸ்ரேல் வேளாண் சிறப்புத் திட்ட மையங்கள் மற்றும்“ இந்திய-இஸ்ரேல் சிறப்பு கிராமங்கள்” திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. வேளாண் துறைக்கு எப்போதுமே முன்னுரிமை அளிக்கும் வகையில் கடந்த 1993-ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகின்றன. இருநாடுகளும் இதுவரை நான்கு செயல் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளன.

இது, 5-வது இந்திய-இஸ்ரேல் வேளாண் செயல் திட்டமாகும்.

☞ **மாலத்தீவின் அத்து நகரில் (Addu City), புதிய இந்திய துணை தூதரகம் திறக்க மத்திய அமைச்சரவை 25-5-2021 அன்று ஒப்புதல்** வழங்கியது.

☞ **பிரிட்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ஜீன் 2021 ல் நடைபெறும் ஜி7 கூட்டமைப்பு நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் இணையவழியில் பங்கேற்க இந்தியாவுக்கு அழைப்பு** விடுக்கப்பட்டுள்ளது.

3,4 ஜூன் 2021 தேதிகளில் நடைபெறும் இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் இணையவழியிலேயே பங்கேற்கின்றனர். இதற்கான ஏற்பாடுகளை பிரிட்டன் அரசு மேற்கொண்டுள்ளது. கரோனா தொற்று இந்தியாவில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ள சூழலில் நடைபெறும் இந்த மாநாடு மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஜி7 கூட்டமைப்பு நாடுகளின் அமைச்சர்கள் தவிர இந்தியா, தென்கொரியா, ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

☞ **பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.14 ஆயிரம் கோடி கடன் பெற்று திருப்பிச் செலுத்தாமல் மோசடி செய்த தொழிலதிபர் மெகுல் சோக்ஸி, டோமினிகா நாட்டிலிருந்து கியூபாவுக்கு படகில் தப்பிச் செல்லும் போது அந்நாட்டு போலீஸாரிடம் சிக்கினார்.**

☞ **முதலாவது பிரிக்ஸ் நாடுகளின் வேலைவாய்ப்பிற்கான பணிக்குழுவின் (BRICS Employment Working Group) கூடுகை இணையவழியில் நடைபெற்றது.** இதனை பிரிக்ஸ் அமைப்பின் சார்பாக இந்தியா நடத்தியது.

**கூ.தக.** : 2021 ஆம் ஆண்டில் பிரிக்ஸ் அமைப்பிற்கு இந்தியா தலைமை தாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

☞ **கரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவுக்கு கை கொடுக்கும் விதமாக ஐரோப்பிய முதலீட்டு வங்கி (இஐபி) 2,50,000 யூரோ (இந்திய மதிப்பில் சுமார் ரூ.2.22 கோடி) நிதியுதவியை** அறிவித்துள்ளது.

☞ **2020 ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவிற்கு அதிக அளவில் பயணியர் வாகனங்களை ஏற்றுமதி செய்த நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தைப்** பெற்றுள்ளது.

☞ **இந்தியா - இஸ்ரேல் - ஐக்கிய அரபு எமிரேட்டுகள் நாடுகளிடையேயான முதலாவது வர்த்தக ஒப்பந்தம் மே 2021 ல் செய்துகொள்ளப்பட்டுள்ளது**. இதன்படி, ‘Ecoppia’ எனும்

இஸ்ரேலிய நிறுவனத்தின் மூலம் இந்தியாவில் தானியங்கி சூரிய சக்தி தூய்மை தொழில்நுட்பங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

☞ **உலகளாவிய புத்தாக்க கூட்டுறவு தொடர்பாக, இந்தியாவும், இங்கிலாந்தும் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை 5-5-2021 அன்று பின்னேற்பு ஒப்புதல்** அளித்துள்ளது.

இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகமும், இங்கிலாந்து நாட்டின் அயலுறவு, காமன்வெல்த் மற்றும் வளர்ச்சி அலுவலகமும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், மூன்றாம் உலக நாடுகளில் தமது புத்தாக்க முயற்சிகளை விரிவுபடுத்த இந்திய ஆய்வாளர்களுக்கு உதவும். இதன் மூலம் அவர்கள் புதிய சந்தைகளைக் கண்டறியவும், தற்சார்புடன் செயல்படவும் இயலும். இந்தியாவில் புத்தாக்க சுற்றுச்சூழல் அமைப்புக்கும் இது பங்களிக்கும்.

☞ **புலம் பெயர்தல் மற்றும் போக்குவரத்து கூட்டுறவு தொடர்பாக, இந்தியாவுக்கும், இங்கிலாந்து மற்றும் வடக்குத் தீவுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ள மத்திய அமைச்சரவை 5-5-2021 அன்று ஒப்புதல்** அளித்துள்ளது.மாணவர்கள், ஆய்வாளர்கள், தொழில் வல்லுனர்கள் ஆகியோருக்கு விசா அளிப்பதில் தளர்வுத்தன்மைக்கும், சட்டத்திற்கு புறம்பான புலம் பெயர்தல், ஆட்களை கடத்துதல் தொடர்பான பிரச்சனைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும்.

☞ **நாட்டின் இயற்கை விவசாய பொருட்களின் ஏற்றுமதிக்கு பெரும் ஊக்கமளிக்கும் விதத்தில், இமயமலையில் பனி படர்ந்த கங்கை தண்ணீரில் விளைந்த தினையை முதல்முறையாக டென்மார்க்கிற்கு இந்தியா ஏற்றுமதி செய்கிறது**.

☞ **ரூ.18, 000 கோடி மதிப்பிலான 'P-8I' (Poseidon-8I) ரக போர் விமானங்களை இந்தியாவிற்கு விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல்** வழங்கியுள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

☞ **சீனாவின் வூஹான் ஆய்வகத்திலிருந்து கரோனா தீநுண்மி கசிந்ததன் மூலம்தான் கரோனா பெருந்தொற்று பரவத் தொடங்கியது என்பதற்கு சாத்தியக்கூறு உள்ளது என பிரிட்டன் உளவு அமைப்புகள்** நம்புவதாக 'சன்டே டைம்ஸ்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. இதையடுத்து, கரோனா தீநுண்மியின் தோற்றம் குறித்து முழுமையாக விசாரிக்க வேண்டுமென உலக சுகாதார அமைப்பை பிரிட்டனின் தடுப்பூசிகள் துறை அமைச்சர் நதீம் ஷகாவி வலியுறுத்தியுள்ளார்.

☞ **'ஸ்டெட்ஃபெஸ்ட் டிஃபெண்டர் 21' ('Steadfast Defender 21')** என்ற பெயரில் போர் விளையாட்டு ஒத்திகையை (War Games) 'நேட்டோ' எனப்படும் வடக்கு அட்லாந்து ஒப்பந்த அமைப்பின் (North Atlantic Treaty Organization (NATO)) நாடுகள் ஜெர்மனி, போர்ச்சுக்கல் மற்றும் ரொமானியா நாடுகளில்

மே -ஜீன் 2021 மாதங்களில் நடத்துகின்றன. 20 நேட்டோ உறுப்பு நாடுகளைச் சேர்ந்த 9000 க்கும் மேற்பட்ட படைவீரர்கள் இந்த ஒத்திகையில் பங்கேற்கின்றன.

☞ **'ஹைபிரிட் அரிசி ரகத்தின் தந்தை' (father of hybrid rice) என அழைக்கப்படும் சீனாவைச் சேர்ந்த வேளாண் விஞ்சானி யுவான் லாங்பிங் (Yuan Longping) காலமானார்.**

☞ **'ஒரே சுகாதார உயர்மட்ட வல்லுநர் குழு' (One Health High-Level Expert Panel) :** இனி வரும் காலங்களில் மனிதர்களிலிருந்து மற்றும் விலங்குகளிலிருந்து பரவும் நோய்களைத் தடுப்பதற்கான உலகளாவிய திட்டத்தை உருவாக்குவதற்காக, ஐக்கிய நாடுகளவையின் அமைப்புகளாகிய உலக சுகாதார நிறுவனம் (World Health Organization(WHO)), ஐ.நா. சுற்றுசூழல் திட்டம் (United Nations Environment Programme (UNEP)) , உணவு மற்றும் வேளாண் அமைப்பு (Food and Agriculture Organization (FAO)) , விலங்கு சுகாதாரத்திற்கான உலக நிறுவனம் (World Organization for Animal Health (OIE))ஆகியவற்றைச் சேர்ந்த வவல்லுநர்களைக் கொண்ட 'ஒரே சுகாதார உயர்மட்ட வல்லுநர் குழு' (One Health High-Level Expert Panel) அமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை 2020 ஆம் ஆண்டில் முதல்முறையாக ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகள் தொடங்கின. இந்த குழுவின் முதல் கூடுகையானது மே 2021 ல் நடைபெற்றது.

☞ **'யுனைட் அவேர்' ('UNITE AWARE')** என்று பெயரிடப்பட்டுள்ள மொபைல் செயலியை, ஐ.நா. அமைதிப்படை வீரர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கா இந்தியா உருவாக்கியுள்ளது. இந்த மொபைல் செயலியானது, வரும் ஆகஸ்ட் 2021 ல் ஐ.நா. பாதுகாப்பு கவுண்சிலின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்கும் போது வெளியிடப்படும்.

**கூ.தக.** : ஐ.நா. பாதுகாப்பு கவுண்சிலின் தலைமைப் பொறுப்பானது, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு மாதம் என வழங்கப்படுகிறது.

☞ **உலக சுகாதார நிறுவனத்தின் (World Health Organization (WHO)) முதலாவது WHO பயோஹப் வசதி (BioHub Facility) சுவிட்சர்லாந்து நாட்டின் ஸ்பியஸ் (Spiez) எனுமிடத்தில் அமையவுள்ளது**. உலகளவில், ஆய்வகங்களுக்கும் உலகளாவிய கூட்டாளர்களுக்கும் இடையில் வைரஸ்கள் மற்றும் பிற நோய்க்கிருமிகளை பற்றிய தகவல்களை விரைவாகப் பகிர்வதற்கு இந்த வசதி வழிவகிக்கும்.

☞ **காற்றில் பரவக்கூடிய புதிய வகை கொரோனா வைரஸ் வியட்நாம் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

☞ **ஃபைசா் மற்றும் பயோஎன்டெக் நிறுவனங்கள் தயாரித்த கரோனா தடுப்பூசியை 12 வயது முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு செலுத்த ஐரோப்பிய மருந்துகள் ஆணையம் பரிந்துரை செய்துள்ளதாக** அதன் தலைவா் மாா்கோ கவலெரி தெரிவித்துள்ளாா்.

☞ **சிரியா அதிபராக பஷாா் அல்-ஆசாத் 4-ஆவது முறையாக மீண்டும் தோ்ந்தெடுக்கப்பட்டுள்ளாா்.**

☞ **அமெரிக்காவின் வெளிநாட்டு வர்த்தக சேவைகள் பிரிவின் இயக்குநராக இந்திய-அமெரிக்கரான அருண் வெங்கட்ராமனை அந்நாட்டு அதிபர் ஜோ பைடன்** நியமித்துள்ளார்.

☞ **மாலியில் ஆட்சி கவிழ்ப்பில் ஈடுபட்ட ராணுவ கர்னல் கொய்டாவை அந்நாட்டு இடைக்கால அதிபராக நீதிமன்றம் அறிவித்து உள்ளது.**

☞ **இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் மற்றும் அவரது காதலி ஹேரி சைமண்ட்ஸ் இடையே ரகசியத்திருமணம்** நடைபெற்றுள்ளது.

☞ **கையால் எழுதப்பட்ட உலகின் மிகப்பெரிய 'பைபிள்' -ஐ துபாயில் வசித்து வரும் இந்தியரான மனோஜ் சாமுவேல் என்பவரின் குடும்பம் தயாரித்துள்ளது.** அந்த பைபிளை துபாயில் உள்ள மார் தோமா தேவாலயத்திற்கு அவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். சாதாரண ஏ-4 அளவுள்ள காகிதத்தை விட 8 மடங்கு பெரிதான ஏ-1 அளவுள்ள காகிதங்களில் இந்த பைபிள் எழுதப்பட்டுள்ளது.

☞ **ஏழை நாடுகளுக்கு 10 கோடி கொரோனா தடுப்பூசிகளை வழங்க ஐரோப்பிய கூட்டமைப்பு ஒப்புதல் வழங்கியுள்ளது.**

இலங்கையின், அம்பன்தோட்டா துறைமுகத்தை, 99 ஆண்டுகள் சீனாவுக்கு சொந்தமாக்கும் உரிமைக்கான சட்டத்திற்கு அந்நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**கூ.தக.** :கன்னியாகுமரி முனையிலிருந்து 290 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அம்பன் தோட்டா துறைமுகம் சுமார் 540 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும்.

☞ **சீன தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சிச்சுவான் மாகாணத்தில் (Sichuan Province) உள்ள சான்சிங்டுய் (Sanxingdui) இடிபாடுகளில் ஆறு புதிய தியாகக் குழிகளையும் 3,000 ஆண்டுகளுக்கு முந்தைய 500 பொருட்களையும் கண்டுபிடித்துள்ளனர்.** ஆறு குழிகளில் நான்கில் தங்க முகமூடிகள், தங்கப் படலம், மினியேச்சர் தந்த சிற்பங்கள், வெண்கல மரங்கள், வெண்கல முகமூடிகள், கார்பனேற்றப்பட்ட அரிசி மற்றும் விதைகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

☞ **இஸ்ரேல் இராணுவத்தின் உளவு அமைப்பான 'மொசாட்' (Mossad) - இன் புதிய தலைவராக டேவிட் பார்னியா (David Barnea) என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.**

☞ **காங்கோ நாட்டின் பிரதம மந்திரியாக அனாடாலெ கோலினெட் மகோசோ** (Anatole Collinet Makosso) நியமிக்கப்பட்டுள்ளார்.

☞ **ஆப்பிரிக்க பொருளாதாரங்களுக்கு நிதி வழங்குவது தொடர்பான உச்சிமாநாடு 2021 (Summit on Financing of African Economies 2021) - ல் இந்தியாவின் சர்பாக மத்திய வெளியுறவு இணை அமைச்சர் வி.முரளிதரன் அவர்கள் 18-5-2021 ல் இணையவழியில் பங்கேற்றார்.**

☞ **நேபாளத்தில் தொடர்ந்து அரசியல் நெருக்கடி நீடித்து வந்த நிலையில், அதிபர் பித்யா தேவி பண்டாரி 22-5-2021 அன்று அந்நாட்டின் நாடாளுமன்றத்தை கலைத்து உத்தரவிட்டார்.** அங்கு நவம்பர் 2021 ல் இடைத்தேர்தல் நடப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

☞ **இஸ்ரேலுக்கும், ஹமாஸ் இயக்கத்தினருக்கும் இடையே கடந்த 11 நாள்களாக நடைபெற்று வந்த சண்டையை நிறுத்த இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டனர்.** இந்த ஒப்பந்தம் 21-5-2021 அதிகாலை முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இஸ்ரேல்-காசா மோதலில் 257 பேர் மரணமடைந்துள்ளதாகவும், 8,538 பேர் காயமடைந்துள்ளதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல், ஹமாஸ் இடையிலான சண்டையை நிறுத்துவதில் **எகிப்து முக்கியப் பங்காற்றியது**. காஸாவுக்கு மருத்துவ உதவிகள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகளைச் செய்யவுள்ளதாகவும் அந்நாடு அறிவித்துள்ளது.

☞ **ஆசிய அமெரிக்கர்களுக்கு எதிரான இனவெறி குற்றங்களுக்கு தீர்வு காணும் விதமாக "கொரோனா இனவெறி குற்றங்கள் சட்டம்"** என்கிற சட்ட மசோதாவிற்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கையெழுத்திட்டுள்ளார்.

☞ **'ஏ-76' எனப்படும், உலகின் மிகப்பெரிய பனிப்பாறை அண்டார்டிகா பனிப் பிரதேசத்திலிருந்து பிரிந்து கடலில் மிதக்கத் தொடங்கியிருப்பதாக ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.** அந்த மையம் வெளியிட்டுள்ள தகவல்படி, அந்தப் பனிப்பாறை, புது தில்லியைவிட 3 மடங்கு பெரியது என்று தெரியவந்துள்ளது. தில்லியின் பரப்பளவு 1,484 சதுர கிலோ மீட்டர்களாக உள்ள நிலையில், இந்தப் பனிப் பாறை சுமார் 4,320 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும்.

☞ **திபெத்தில் பிரம்மபுத்ரா நதியின் குறுக்கே 6,009 மீட்டர் பள்ளத்தாக்கில் 67.22 கி.மீ.** தூரத்துக்கு சீனா நெடுஞ்சாலை அமைத்துள்ளது.

உலகிலேயே மிக ஆழமான பள்ளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நெடுஞ்சாலை இதுவாகும். இந்தியாவின் அருணாசல பிரதேசத்தின் சர்வதேச எல்லைக் கோட்டுக்கு அருகே இந்த நெடுஞ்சாலை அமைந்துள்ளது.

☞ **அடுத்த 18 மாதங்களில் நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு 2 பில்லியன் டோஸ் கோவிட் -19 தடுப்பூசிகளை வழங்கவுள்ளதாக ஃபைசர்-பயோடெக் (Pfizer-BioNTech) நிறுவனம் உறுதிமொழி அளித்துள்ளது**

**கூ.தக.** : 'ஃபசர் - பயோண்டெக் கோவிட்-19 தடுப்பூசியை' (Pfizer-BioNTech COVID-19 vaccine) ஜெர்மனியைச் சேர்ந்த BioNTech நிறுவனமும், அமெரிக்காவைச் சேர்ந்த Pfizer நிறுவனமும் இணைந்து தயாரித்துள்ளன.

☞ **மாலி நாட்டின் பிரதமராக மோக்டர் குவானே (Moctor Ouane) நியமிக்கப்பட்டுள்ளார்.**

**கூ.தக.** : மாலி நாட்டின் அதிபராக 'பாண்டாவ்' (Bah Ndaw) உள்ளார்.

☞ **அமெரிக்க அதிபரின் மூத்த ஆலோசகராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண்ணான நீரா தாண்டன்** நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

☞ **நேபாளத்தின் புதிய பிரதமராக கே.பி.சர்மா ஒளி** மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

☞ **உகாண்டா நாட்டின் அதிபராக யோவேரி முசேவேணி (Yoweri Museveni)** 6 வது முறையாகப் பொறுப்பேற்றுள்ளார்.

☞ **"அயன் டோம்" (Iron Dome) வான் பாதுகாப்பு அமைப்பு** : மே 2021 ல் 11 நாட்கள் நடைபெற்ற இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரின் போது, பாலஸ்தீன் நாட்டின் ஹமாஸ் போராட்டப் பிரிவினரால் ஏவப்பட்ட 2000 க்கும் மேற்பட்ட ஏவுகணைகளில் பெரும்பாலானவை இஸ்ரேலின் "அயன் டோம்" (Iron Dome) எனப்படும் வான் பாதுகாப்பு அமைப்பினால் (air-to-air defence system) வானிலேயே தடுத்து அழிக்கப்பட்டன. இந்த அயன் டோம் அமைப்பானது 2011 ஆம் ஆண்டில் இஸ்ரேலின் 'ரஃபேல் அட்வான்ஸ் சிஸ்டம்' (Rafael Advance Systems) நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டதாகும்.

☞ **'நாக் கலாச்சாரத்தைச்' (Nok Culture) சேர்ந்த தேனீ மெழுகுகளடங்கிய பானைகள் நைஜீரியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

**<u>நாக் கலாச்சாரத்தைப் பற்றி :</u>**

கி.பி.1500 முதல் கி.பி. 500 ஆண்டுகள்வரையில் நாக் கலாச்சாரம் மத்திய நைஜீரியா பகுதியில் வாழ்ந்தது. இந்த கலாச்சாரத்தைச் சேர்ந்த மக்கள் இரும்பு காலத்தைச் சேர்ந்தவர்களாக அறியப்படுகிறார்கள்.

☞ லண்டன் மேயராக பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்தவரும் தொழிலாளர் கட்சியை சேர்ந்தவருமான சாதிக் கான் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

☞ 12 முதல் 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு, பைசர்-பயோஎன்டெக் கொரோனா தடுப்பூசியைப் பயன்படுத்த அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) அனுமதி அளித்துள்ளது. 12 - 15 வயது சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்படுவது உலக அளவில் இதுவே முதல் முறையாகும்.

☞ **கரோனா தடுப்பூசி விநியோகத்தை அதிகரிக்கும் வகையில் அவற்றுக்கான அறிவுசார் சொத்துரிமை கட்டுப்பாடுகளை தற்காலிகமாக நீக்க வேண்டும் என்று உலக வர்த்தக அமைப்பிடம் (டபிள்யூ.டி.ஓ) இந்தியா மற்றும் தென்னாப்பிரிக்கா முன்வைத்த பரிந்துரைக்கு ஆதரவு தெரிவிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.**

☞ **மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸும் அவரது மனைவி மெலிண்டா கேட்ஸும் விவாகரத்து செய்துகொள்ளப் போவதாக அறிவித்துள்ளனர்**. இதையடுத்து, புகழ் பெற்ற பில் - மெலிண்டா அறக்கட்டளையின் எதிர்காலம் குறித்து அச்சம் எழுந்துள்ளது.எனினும், அந்த அறக்கட்டளையை வழக்கம் போல் இணைந்து நடத்தவிருப்பதாக பில் கேட்ஸும் மெலிண்டாவும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். 5,000 கோடி டாலர் (சுமார் ரூ.3.7

லட்சம் கோடி) மதிப்புடைய பில் - மெலிண்டா அறக்கட்டளை, சர்வதேச சுகாதார மேம்பாடு போன்ற அறப்பணிகளில் கவனம் செலுத்தி வருகிறது.

☞ **2020 -2030 க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் உலகளவில் 45% மீத்தேன் வெளியீட்டை குறைக்க முடியும் எனவும், அவ்வாறு நடைபெற்றால் 2045 க்குள் 0.3டிகிரி செல்சியஸ் புவி வெப்பமயமாதலை குறைக்க முடியும்** எனவும் ஐக்கிய நாடுகளவையின் சுற்றுசூழல் திட்டம் (United Nations Environment Programme (UNEP) மற்றும் Climate and Clean Air Coalition (CCAC) எனும் அமைப்பு இணைந்து வெளியிட்டுள்ள '2021 Global Methane Assessment: Benefits and Costs of Mitigating Methane Emissions' எனும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கூ.தக.** : மனிதர்களால் உருவாகும் மீத்தேன் மாசுபாடானது, புதைபடிவ எரிபொருட்கள் (fossil fuels) - 35%, நிலப்பரப்புகள் மற்றும் கழிவுகள் (landfills and waste) - 20% மற்றும் விவசாயம் - 40 % ஆகியவற்றிலிருந்து ஏற்படுகிறது குறிப்பிடத்தக்கது.

☞ **ஆப்பிரிக்காவின் மிகப் பழமையான (78000 ஆண்டுகளுக்கு முந்தைய) மனிதர்களை புதைக்கும் இடம்** கென்யன் கோஸ்ட் (Kenyan coast) பகுதியில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இந்த பகுதியில் 2 முதல் 3 வயதான ஒரு குழந்தையின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**கூ.தக.** உலகின் மிகப்பழமையான (120,000 வருட பழமையான) நியாண்டர்தால் மனிதர்கள் புதைவிடம் (Neanderthal burial site) இஸ்ரேலின் கெபாரா குகையில் (Kebara Cave) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

☞ **உலகின் வெப்பநிலையானது 2100 ஆம் ஆண்டுவாக்கில் 2.4டிகிரி செல்சியஸ் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக** Climate Action Tracker எனும் அமைப்பு தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

☞ **'சினோ∴பார்ம்' (Sinopharm Vaccine)** என்ற பெயரிலான கொரோனா நோய்க்கெதிராக சீனா தயாரித்துள்ள தடுப்பூசியை அவசரகாலப் பயன்பாட்டிற்கு உலக சுகாதார நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகளின் படி, இந்த சினோ∴பார்ம் தடுப்பூசியானது கோவிட்-19 க்கெதிராக 79% திறன் கொண்டது.

**கூ.தக.** : சீனா கண்டுபிடித்துள்ள மற்றொரு தடுப்பூசியின் பெயர் 'சினோவா∴க்' (Sinovac) என்பதாகும்.

☞ 1969 ஆம் ஆண்டில் நிலவில் மனிதன் முதல்முறையாக இறங்கின நிகழ்வுடன் தொடர்புடைய **அப்போலோ 11 (Apollo 11) விண்கலத்தின் பைலட்டாக செயல்பட்ட அமெரிக்க விண்வெளி வீரர் மைக்கேல் காலின்ஸ் (Michael Collins) தனது 90 வது வயதில் அமெரிக்காவில் காலமாகியுள்ளார்.**

☞ **இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வனிதா குப்தா (Vanita Gupta) என்ற பெண்மணி அமெரிக்காவின் இணை அட்டர்னி ஜெனரலாக (Associate Attorney General of United States) நியமிக்கப்பட்டுள்ளார்.** இதன் மூலம், இந்த பொறுப்பில் நியமிக்கப்படும் முதல் இந்திய-அமெரிக்கர் என்ற பெருமையை வனிதா குப்தா பெற்றுள்ளார்.

☞ **'உலக காடுகள் இலக்கு அறிக்கை 2021' (Global Forest Goals Report, 2021) ஐ** ஐக்கிய நாடுகளவை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின் படி, உலகின் 25% மக்கள்தொகையின் (1.6 பில்லியன்) வாழ்வாதாரம் காடுகளை சார்ந்தே உள்ளது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா ஆண்டொன்றிற்கு 200,000 ஹெக்டேர் அளவிற்கு மரங்கள் மற்றும் காடுகளை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கூ.தக.** : நிலையான காடுகள் மேலாண்மையை மேம்படுத்துவதற்காக காடுகளுக்கான ஐக்கிய நாடுகளின் திட்டம் 2017 மற்றும் 2030 க்கு இடையில் செயல்படுத்தப்படவுள்ளது. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் 2030 க்குள் உலகின் வனப்பகுதியை 3% அதிகரிப்பதாகும்.

☞ **உலகிலேயே முதலாவது குழந்தையை வயிற்றில் சுமந்த நிலையிலுள்ள கற்பிணி பெண் மம்மியை (mummy) போலந்து நாட்டிலுள்ள வார்சா தேசிய அருங்காட்சியத்தில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.**

# பொருளாதாரம்

☞ **இந்தியாவின் முதல் குறியீட்டு நாணயத்தைக் கொண்டு (cryptocurrency) நடைபெறும் கடன் வழங்கும் தளத்தை 'ஷெப்பே' (ZebPay) நிறுவனம் தொடங்கியுள்ளது.** தற்போது , இந்த தளத்தின் மூலம், bitcoin (BTC), ether (ETH), tether (USDT) மற்றும் dai (DAI) ஆகிய குறியீட்டு நாணயங்களில் பரிமாற்றம் செய்ய இயலும்.

**கூ.தக.** : டிஜிட்டல் / மெய்நிகர் பணம் (digital or virtual currency) எனப்படும் குறியீட்டு நாணயமானது (cryptocurrency) முதன் முதலில் 2009 ஆம் ஆண்டு சதோஷி நகமோட்டோ ('Satoshi Nakamoto') என்பவரால் 'பிட் காயின்' (Bitcoin) என்ற பெயரில் வெளியிட்டது.

☞ **ஒருங்கிணைந்த பணப்பரிமாற்ற இடைமுகத்துடன் (Unified Payments Interface (UPI)) இணைக்கப்பட்டுள்ள முதல் டிஜிட்டல் வாலட் (digital wallet) எனும் பெருமையை 'பாக்கெட்ஸ்' ('Pockets')** எனும் ஐ.சி.ஐ.சி.ஐ. (ICICI (Industrial Credit and Investment Corporation of India)) வங்கியினால் உருவாக்கப்பட்டுள்ள டிஜிட்டல் வாலட் பெற்றுள்ளது.

☞ **ஜிஎஸ்டியில் இருந்து கரோனா தடுப்பூசி, மருந்துகளுக்கு விலக்களிப்பது தொடர்பாக ஆராய மத்திய நிதியமைச்சகம் குழு அமைத்தது.** மேகலயா முதல்வர் கொன்ராட் சங்கா தலைமையில் 8 மாநிலங்களின் பிரதிநிதிகள் கொண்ட குழுவில், உ.பி., ஒடிசா, தெலங்கானா, கேரள மாநில நிதியமைச்சர்கள், குஜராத், மகாராஷ்டிர மாநில துணை முதல்வர்கள் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர். அதேசமயம் மத்திய அரசு அமைத்த குழுவில் தமிழகம், மேற்குவங்க மாநில பிரதிநிதிகள் இடம்பெறவில்லை.

☞ **கருப்பு பூஞ்சை தொற்றுக்கான மருந்துக்கு வரியை ரத்து செய்ய 43 வது ஜி.எஸ்.டி. கவுன்சில் முடிவு செய்துள்ளது.** அதேநேரம் கொரோனா தடுப்பூசி மற்றும் மருத்துவ தளவாடங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி தொடரும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

☞ **இந்தியாவிலுள்ள ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களின் மீதான அந்நிய முதலீட்டை தற்போதைய 49% த்திலிருந்து 74 % த்திற்கு உயர்த்துவதற்கான , 'இந்திய காப்பீட்டு நிறுவனங்கள் (வெளிநாட்டு முதலீடு) திருத்த விதிகள்**, 2021 (Indian Insurance Companies (Foreign Investment) Amendment Rules, 2021) ஐ மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

☞ **'CCI Journal on Competition Law and Policy' என்ற பெயரில் இந்திய போட்டி ஆணையத்தின் (Competition Commission of India(CCI)) ஆராய்ச்சி இதழின் முதல் பதிப்பை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அவர்கள் 20-5-2021 அன்று வெளியிட்டார்**. இந்த ஆராய்ச்சி இதழ் ஆண்டிற்கு ஒருமுறை வெளியாகும்.

**கூ.தக.** : இந்திய போட்டி ஆணையம் போட்டி சட்டம் 2002 (Competition Act, 2002) - இன் கீழ் 20-5-2009 ல் தொடங்கப்பட்டது.

இந்திய போட்டி ஆணையத்தின் தற்போதைய தலைவர் - அஷோக் குமார் குப்தா

☞ **அனைத்து தங்க நகைகளுக்கும் ஹால்மார்க்கின் பெறுவது அவசியம் (Hallmarking of Gold Jewellery) எனும் நடைமுறை 15 ஜீன் 2021 முதல் அமலுக்கு வருவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.** இது தொடர்பான விவகாரங்களை கண்காணிக்க பிரமோத் திவாரி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

☞ **தற்போது ரிசர்வ் வங்கியிடம் இருக்கும் உபரி தொகையான ரூ.99,122 கோடியை மத்திய அரசுக்கு வழங்க ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.**

**கூ.தக.** :வங்கிக்கடனுக்கான வட்டி உள்ளிட்டவை மூலம் ரிசர்வ் வங்கி ஈட்டும் வருவாயில் அனைத்து விதமான செலவினம் போக மீதி இருப்பை ரிசர்வ் வங்கி உபரி தொகையாக வைத்திருக்கிறது.இந்த உபரித்தொகை ஏற்கனவே கடந்த 2019-ம் ஆண்டு மத்திய அரசுக்கு வழங்கப்பட்டது. அப்போது ரூ.1.76 லட்சம் கோடியை மத்திய அரசுக்கு ரிசர்வ் வங்கி அளித்தது.

☞ **2020-21 ஆம் நிதியாண்டின் தனிநபர் வருமானத்தில் வங்கதேசம் இந்தியாவை முந்தியுள்ளது**.2020-21 ஆம் நிதியாண்டில் வங்கதேசத்தின் தனிநபர் வருமானம் 2,227 அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. இது கடந்த நிதியாண்டில் 2,064 ஆக இருந்தது.

வங்கதேசத்தின் தனிநபர் வருமானம் இந்தியாவுடன் ஒப்பிடும்போது 280 டாலர்கள் அதிகமாகும். இந்தியாவில் 2020-21ஆம் நிதியாண்டில் தனிநபர் வருமானம் 1947 டாலர்களாக உள்ளது.

☞ **2021 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.5% ஆகவும், 2022 ஆம் நிதியாண்டில் 10.1 % ஆகவும் இருக்கும் என ஐக்கிய நாடுகளவையின் 'World Economic Situation and Prospects' என்ற அறிக்கையில் கணிக்கப்பட்டுள்ளது.**

☞ **மேற்கு வங்காளத்தை சேர்ந்த யுனைடட் கோஆபரேடிவ் வங்கி லிமிடெட் ( United Co-operative Bank Ltd.) -ன் உரிமத்தை ரிசர்வ் வங்கி ரத்து செய்துள்ளது**.

☞ 'டிஜி கோல்டு' ('DigiGold') என்ற பெயரில் தங்கத்தின் மீதான முதலீட்டிற்கான டிஜிட்டல் தளத்தை ஏர்டெல் பேமெண்ட் வங்கி உருவாக்கியுள்ளது.

☞ அடுத்த ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 10.1 சதவீதமாக இருக்கும் என்று ஐ.நா.வின் உலக பொருளாதார சூழல் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞ இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு மே 7-ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 58, 946 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமார் ரூ.44.20 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது.

☞ ரிசர்வ் வங்கியின் இரண்டாவது ஒழுங்குமுறைகள் மறு ஆய்வு ஆணையம் ( Regulations Review Authority (RRA 2.0)), ரிசர்வ் வங்கியின் ஒழுங்குமுறைகளை மறு ஆய்வு செய்ய எஸ்.ஜானகிராமன் தலைமையிலான ஆறு நபர் ஆலோசகர் குழுவை அமைத்துள்ளது.

☞ மத்திய அரசு ஊழியர்களின் வைப்பு-இணைக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டம் 1976 (Deposit-Linked Insurance Scheme(EDLI),1976) இல் திருத்தி, அதை ஊழியர்களின் வைப்பு-இணைக்கப்பட்ட காப்பீட்டு (திருத்தம்) திட்டம், 2021 (Deposit-Linked Insurance

(Amendment) Scheme, 2021) என்று பெயரிட்டுள்ளது. இந்த திருத்தத்தின் படி, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அதிகப்பட்ச பணம் ரூ.6 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

☞ 2021 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் கச்சா எண்ணெய் உற்பத்தி முந்தைய நிதி ஆண்டை விட 5% குறைந்துள்ளதாகவும், இயற்கை எரிவாயு உற்பத்தி 8% குறைந்துள்ளதாகவும், பெட்ரோலியம் சார்ந்த உற்பத்தி பொருட்களின் உற்பத்தி 11.2% ஆக குறைந்துள்ளதாக மத்திய பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

☞ 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் மொத்த வாகன விற்பனையில் 30% த்திற்கு அதிகமாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களாக இருக்கும் என சர்வதேச ஆற்றல் முகமை (International Energy Agency (IEA)) வெளியிட்டுள்ள 'Global EV Outlook 2021' என்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞ 2021 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கான (GDP Growth) தனது கணிப்பை முந்தைய 11.8% த்திலிருந்து 10.2% ஆக குறைத்து ஆக்ஸ்ஃபோர்டு எக்கணாமிக்ஸ் (Oxford Economics) நிறுவனம் அறிவித்துள்ளது.

☞ வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தனிநபர் பயன்பாட்டிற்கான ஆக்சிஜன் செறிவூட்டிகளுக்கான (oxygen concentrators) சர்வதேச ஜி.எஸ்.டி. (IGST)வரியை 28 % த்திலிருந்து 12% ஆக மத்திய நிதி அமைச்சகம் குறைத்துள்ளது.

☞ இந்தியாவின் 'ஆயுள் காப்பீட்டு நிறுவனம்' (Life Insurance Corporation (LIC)) உலகின் மூன்றாவது பலமான ஆயுட்காப்பீடு நிறுவனமாகவும் 10 வது மிக மதிப்புடைய ஆயுள் காப்பீடு

**நிறுவனமாகவும்** , லண்டனைச் சேர்ந்த Brand Finance நிறுவனத்தின் “Insurance 100 2021” எனும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விருதுகள்

☞ **சர்வதேச டப்ளின் இலக்கிய விருது 2021 (International Dublin Literary Award 2021)** ‘Lost Children Archive’ என்ற நாவலுக்காக **மெக்சிகோவைச் சேர்ந்த எழுத்தாளர் வாலெரியா லூசெல்லி** ( Valeria Luiselli) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

☞ **உலக ஆடற்கலை விருது 2020 (World Choreography Award 2020) இந்தியாவைச் சேர்ந்த சுரேஷ் முகுந்த் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது**. இந்த விருதைப் பெறும் முதல் இந்தியர் இவராவர்.

☞ **எரிசக்தி எல்லை விருது 2020 (Energy Frontier Award 2020 ) பாரத ரத்னா விருது பெற்ற C.N.R.ராவ் (C.N.R. Rao) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது**. 'International Eni Awards' மற்றும் எரிசக்தி ஆராய்ச்சிக்கான நோபல் பரிசு (Nobel Prize in Energy Research) எனவும் இந்த விருது அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

☞ **இந்தியப் பொருளாதார அறிஞர் அமர்தியாசென்னுக்கு ஸ்பெயின் நாட்டின் உயரிய விருதான ‘பிரின்சஸ் ஆப் ஆஸ்ட்ரியாஸ்’ விருது (Princess of Asturias Award) கிடைத்துள்ளது.** சமூக அறிவியலுக்கான பிரிவில் அவரது பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. ‘வறுமை மற்றும் பஞ்சங்கள்’ என்ற அவரது ஆராய்ச்சிக்காக இந்த பரிசுக்கு அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த விருது, சிறிய சிலையுடன், 50 ஆயிரம் யூரோ தொகை பரிசாக கொண்டது.

**கூ.தக.** : இந்திய பொருளாதார அறிஞர் அமர்தியா சென் 1998-ல் நோபல் பரிசு வென்றார்.

☞ **’லாஸ் ஏஞ்சல்ஸ் இந்திய திரைப்பட விழாவில்’ (Indian Film Festival of Los Angeles (IFFLA)) சிறந்த ஃபியூச்சர் ஃபிலிமிற்கான கிராண்ட் ஜீரி விருது (Grand Jury Award for Best Feature film) தமிழ் திரைப்பட இயக்குநர் தமிழ் என்பவர் இயக்கிய ‘சேத்துமான்’ (‘Seththumaan’) என்ற திரைப்படத்திற்கு** வழங்கப்பட்டுள்ளது.

☞ **’டெம்பிள்டன் பரிசு 2021’ (Templeton Prize) இங்கிலாந்தைச் சேர்ந்த சுற்றுசூழல் ஆர்வலரான ஜேன் குட்வெல்** (Jane Goodall)-க்கு வழங்கப்பட்டுள்ளது.

☞ **மத்திய அரசின் ‘தொழில்நுட்ப மேம்பாட்டு வாரிய விருது 2021** (Technology Development Board Award 2021), கார்பண்டை ஆக்சைடு, மெத்தனால் மற்றும் பிற வேதிப்பொருட்களை எரிபொருட்களாக மாற்றுவதற்கான எரிய தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்ததற்காக, பெங்களூருவைச் சேர்ந்த தொழில்முனைவு நிறுவனமான 'Breathe Applied Sciences' க்கு வழங்கப்பட்டுள்ளது.

☞ **இந்தியா உயிரி பன்முகத்தன்மை விருதுகள் 2021 (India Biodiversity Awards 2021) பெற்றோர் விவரம் வருமாறு,**

'உயிரியல் வளங்களின் நிலையான பயன்பாடு' ('Sustainable Use of Biological Resources) பிரிவில் - Krishi Avam Paristhitiki Vikas Sansthan (KRAPAVIS) எனும் அமைப்பும்,

'வளர்ப்பு உயிரினங்களின் பாதுகாப்பு' (Conservation of domesticated species) எனும் தனிநபர் பிரிவில் ( individual category of') - கேரளாவைச் சேர்ந்த N.M. ஷாஜி என்பவரும்,

'உயிரியல் வளங்களின் நிலையான பயன்பாடு ' (Sustainable Use of Biological Resources) என்ற பிரிவில் - நாகாலாந்திலுள்ள Khonoma Nature Conservation & Tragopan Sanctuary (KNCTS) மும் பெற்றுள்ளன.

**கூ.தக.** : இந்தியா உயிரி பன்முகத்தன்மை விருதுகள், சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (ministry of environment, forest and climate change) , தேசிய பல்லுயிர் ஆணையம் (National Biodiversity Authority (NBA) ) மற்றும் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் (United Nations Development Programme (UNDP)) ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.

☞ **'ஃபின்லாந்து தொழில்நுட்ப அகதமி பரிசு 2020' (Technology Academy Finland (TAF) Prize) சங்கர் பாலசுப்ரமணியன் மற்றும் டேவிட் கிளெனெர்மேன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.**

☞ **மகரிஷி நிறுவனத்தின் (Maharshi Organisation)'சர்வதேச இன்வின்சிபிள் தங்க பதக்கம் 2021' (International Invincible Gold Medal 2021) மத்திய கல்வி அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிஷாக்** அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது .

☞ 'ஃபோர்ச்சூன் பத்திரிக்கை' (Fortune Magazine) வெளியிட்டுள்ள 'உலகில் 50 மிகப்பெரும் தலைவர்கள் பட்டியலில்' , முதல் பத்து இடங்களில் (10 வது இடத்தை) இடம் பெற்றுள்ள ஒரே இந்தியர் ஏனும் பெருமையை **சீரம் ரிசெர்ச் இன்ஸ்டிட்யூட் ஆப் இந்தியா (Serum Institute of India) நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி ஆதார் பூனவாலா** (Adar Poonawalla) பெற்றுள்ளார்.

☞ **2020 ஆம் ஆண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் அழகி போட்டியில் மெக்சிகோ நாட்டின் ஆண்ட்ரியா மெஸா தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.**

73 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்ற இப்போட்டியில் **இந்தியாவின் அட்லின் காஸ்டெலினோ 4-ஆவது இடம் பிடித்தார்**. இப்போட்டியில் பிரேசிலை சேர்ந்த ஜூலியா காமா (28) இரண்டாவது இடத்தையும், பெரு நாட்டைச் சேர்ந்த ஜானிக் மசீட்டா (27) மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

☞ **உலக உணவு பரிசு 2021 (World Food Prize 2021)** இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும், டிரினிடாட் மற்றும் தொபாகோ (Trinidad and Tobago) நாட்டைச் சேர்ந்தவருமான சகுந்தலா ஹரக்சிங் தில்ஸ்டெட் (Dr Shakuntala Haraksingh Thilsted) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

☞ **பசுமை ஆஸ்கர் ("Green Oscar") என அழைக்கப்படும் விட்லே விருதுகள் 2021 (Whitley Awards) நாகாலாந்தைச் சேர்ந்த நாக்லு ஃபோம் (Nuklu Phom) என்பவருக்கு வழங்கப்படுகிறது.** இந்த விருதைப் பெறும் முதல் இந்தியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

☞ **ஜப்பான் நாட்டின் மூன்றாவது உயரிய விருதான 'ஆர்டர் ஆஃப் தி ரைசிங் சன்' ( Order of The Rising Sun ) எனும் விருது இந்திய பெண்மணி சியாமளா கணேஷ் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.**

☞ **தாதாசாகேப் பால்கே சர்வதேச திரைப்பட திருவிழா விருதுகள் 2021 (Dadasaheb Phalke International Film Festival Awards 2021) அறிவிக்கப்பட்டுள்ளது**. அதன் விவரம் வருமாறு,

சிறந்த நடிகை - தீபிகோ படுகோன்

சிறந்த நடிகர் - அக்ஷய் குமார்

சிறந்த சர்வதேச ஃபியூச்சர் திரைப்படம் - பாரசைட் ( Parasite)

சிறந்த இயக்குநர் - அனுராக் பாசு ( Anurag Basu )

சிறந்த திரைப்படம் - தன்ஹாஜி ( Tanhaji )

## நியமனங்கள்

☞ **இந்திய அரசின் உளவு அமைப்பான 'ரா' எனப்படும் 'ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு அமைப்பு' (Research and Analysis Wing(RAW)) வின் செயலர் சமந்த் குமார் கோயல் (Samant Kumar Goel ) மற்றும் இந்திய உளவுத் துறையின் (Intelligence Bureau (India)) தலைவர் அரவிந்த் குமார் (Arvind Kumar) அகியோரின் பதவிக் காலம் 30-6-2021 ல் முடியவுள்ளதையடுத்து, மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது**.

**கூ.தக. :**

ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு அமைப்பு (Research and Analysis Wing(RAW)) 21 செப்டம்பர் 1968 ல் தொடங்கப்பட்டது.

இந்திய உளவுத் துறை (Intelligence Bureau (India)) 1887 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

☞ **மத்தியப் புலனாய்வுத் துறையின் (Central Bureau of Investigation-CBI) இயக்குநர் ஜெனரலாக சுபோத் குமார் ஜெயிஸ்வால் (Subodh Kumar Jaiswal)** அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

☞ **மத்திய ரிசா்வ் போலீஸ் படையின் (சிஆர்பிஎஃப்) தலைமை இயக்குநா் குல்தீப் சிங்குக்கு கூடுதலாக தேசியப் புலனாய்வு அமைப்பின்(என்ஐஏ) தலைமை இயக்குநா் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.**

☞ **ரிசர்வ் வங்கி கண்டுபிடிப்பு மையத்தின் (Reserve Bank Innovation Hub (RBIH)) முதன்மை செயல் அதிகாரியாக (chief executive officer (CEO)) ராஜேஷ் பன்ஸால்** (Rajesh Bansal) 17-5-2021 அன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

**கூ.தக.** : ரிசர்வ் வங்கி கண்டுபிடிப்பு மைய வாரியத்தின் தலைவராக இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவரான எஸ்.கோபாலகிருஷ்ணன் உள்ளார்.

☞ **சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷனின் (Chennai Petroleum Corporation) மேலாண் இயக்குநரக அரவிந்த் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.** சென்னை பெட்ரோலியம் கார்பரேஷன் , இந்தியன் ஆயில் நிறுவனத்தின் துணை நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

☞ **சத்தீஸ்கர் உயர்நீதிமன்றத்தின் மூத்த நிதிபதி திரு பிரசாந்த் குமார் மிஸ்ரா, 2021 ஜூன் 1ம் தேதி முதல் சத்தீஸ்கர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமித்து இந்திய குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.**

☞ **தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (National Human Rights Commission (NHRC)) செயல் தலைவராக (Acting Chairperson) நீதியரசர் பிரபுல்லா சந்திரா பாண்ட் (Prafulla Chandra Pant (PC Pant)) நியமிக்கப்பட்டுள்ளார்.**

☞ **ரிசர்வ் வங்கியின் நான்காவது துணை ஆளுநராக டி.ராபி சங்கர் (T Rabi Shankar) நியமிக்கப்பட்டுள்ளார்.** இவரைத் தவிர ராஜேஸ்வர் ராவ், M.K. ஜெயின் மற்றும் M.D.பத்ரா ஆகியோர் ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர்களாக உள்ளனர். தற்போதைய ரிசர்வங்கி ஆளுநராக சக்திகாந்த தாஸ் உள்ளார்.

**கூ.தக. :**

இந்திய ரிசர்வ் வங்கி மத்திய இயக்குநர்கள் குழுவால் (Central Board of Directors) நிர்வகிக்கப்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டத்தின் கீழ் இயக்குநர்களை இந்திய அரசு நியமிக்கிறது. மத்திய வாரியத்தில் ஆளுநர், நான்கு துணை ஆளுநர்கள், இரண்டு நிதி அமைச்சக பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் வாரியங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு இயக்குநர்கள் உள்ளனர். இந்த உள்ளூர் வாரியங்களின் தலைமையிடங்கள் கொல்கத்தா, மும்பை, சென்னை மற்றும் புது தில்லியில் உள்ளன.

## முக்கிய தினங்கள்

☞ **உலக புகையிலை எதிர்ப்பு தினம்** (World No Tobacco Day) - மே 31 | **மையக்கருத்து** 2021 - வெளியேறுவதற்கு உறுதியளிக்கவும் (Commit to Quit)

☞ **சர்வதேச ஐ.நா. அமைதிப்படையினர் தினம்** (International Day of UN Peacekeepers) - மே 29

☞ **உலக செரிமான சுகாதார தினம்** (World Digestive Health Day) - மே 29 May 29

☞ **சர்வதேச எவரெஸ்ட் தினம்** (International Everest Day) - மே 29

☞ **மாதவிடாய் சுகாதார தினம்** (Menstrual Hygiene Day) - மே 28 | மையக்கருத்து 2021 - மாதவிடாய் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தில் நடவடிக்கை மற்றும் முதலீடு (Action and Investment in Menstrual Hygiene and Health)

☞ **பெண்களின் சுகாதாரத்திற்கான சர்வதேச நடவடிக்கை நாள்** (International Day of Action for Women's Health) - மே 28

☞ **உலக பசி தினம்** (World Hunger Day)- மே 28 | மையக்கருத்து - அணுகல் பசியை முடிகிறது (Access Ends Hunger)

☞ **ஐக்கியநாடுகள் அமைதிப்படை வீரர்கள் தினம்** ( International Day of UN Peacekeepers) - மே 27

☞ **உலக தைராய்டு தினம் (World Thyroid Day)** - மே 25

☞ **சர்வதேச காணாமல் போன குழந்தைகள் தினம்** (International Missing Children's Day) - மே 25

☞ **சுயராஜ்யமற்ற பிராந்தியங்களின் மக்களுடன் ஒற்றுமைக்கான சர்வதேச வாரம்** (International Week of Solidarity with Peoples of Non-Self-Governing Territories) - 25 - 31 மே 2021

☞ **உலக ஆமைகள் தினம்** (World Turtle Day) - மே 23

☞ **சர்வதேச உயிரியல் பன்முகத்தன்மை தினம்** (International Day of Biological Diversity) - மே 22 | மையக்கருத்து 2021 - பிரச்சனையின் தீர்வு நாமே (We're part of the solution)

☞ **தீவிரவாத எதிர்ப்பு தினம்** (Anti Terrorism Day) - மே 21 (முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி 21-5-1991 அன்று படுகொலைச் செய்யப்பட்ட தினத்தன்று அனுசரிக்கப்படுகிறது)

☞ **சர்வதேச தேயிலை தினம்** (International Tea Day) - மே 21

☞ **உலக பேச்சுவார்த்தை மற்றும் வளர்ச்சிக்கான கலாச்சார பன்முகத்தன்மை தினம்** (World Day for Cultural Diversity for Dialogue and Development) - மே 21

☞ **அருகிவரும் உயிரினங்கள் தினம்** 2021 (Endangered Species Day) - மே 21 (மே மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமை)

☞ **உலக அளவியல் தினம்** (World Metrology Day) - மே 20

☞ **உலக தேனீ தினம் (World Bee Day)** - மே 20

☞ **சர்வதேச அருங்காட்சியங்கள் தினம்** (International Museum Day) - மே 18

☞ **உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம்** (World AIDS Vaccine Day) - மே 18

☞ **ஐ.நா. உலக சாலை பாதுகாப்பு வாரம்** (UN Global Road Safety Week) - 17-23 மே

☞ **உலக தொலைதொடர்பு மற்றும் தகவல் சமுதாய தினம்** (World Telecommunication and Information Society Day) - மே 17

☞ **சர்வதேச ஹோமோஃபியா, டிரான்ஸ்ஃபோபியா மற்றும் பைபோபியா** (International Day Against Homophobia, Transphobia and Biphobia) - மே 17

☞ **உலக உயர் இரத்த அழுத்த தினம்** (World Hypertension day) - மே 17

☞ **தேசிய டெங்கு தினம்** (National Dengue Day) - மே 16

☞ **சர்வதேச ஒளி தினம்** (International Day of Light) - மே 16

☞ **தேசிய டெங்கு விழிப்புணர்வு தினம்** (National Dengue Day) - மே 16

☞ **அமைதியில் ஒன்றாக வாழ்வதற்கான சர்வதேச** நாள் (International Day of Living Together in Peace) - மே 16

☞ **உலக வேளாண் - சுற்றுலா தினம்** (World Agri-Tourism Day) - மே 16

☞ **சர்வதேச குடும்பங்கள் தினம்** (International Day of Families) - மே 15 | மையக்கருத்து - குடும்பங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் (Families and New Technologies)

**கூ.தக.** ஐக்கிய நாடுகளவையின் சர்வதேச குடும்பங்கள் ஆண்டாக (International Year of Families) 2024 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

☞ **சர்வதேச செவிலியர் தினம்** (International Nurses Day) - மே 12

☞ **உலக செவிலியர் தினம்** - மே 12

☞ **உலக செவிலியர் தினம்** - மே 12

☞ **தேசிய தொழில்நுட்ப தினம் (National Technology Day)** - மே 11 | மையக்கருத்து - நிலையான எதிர்காலத்திற்கான தகவல் தொழில்நுட்பம் (Science and Technology for a Sustainable Future)

**கூ.தக.** : 1998 ஆம் ஆண்டில் பொக்ரான் அணு சோதனை நடைபெற்றதன் நினைவாக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.

☞ **உலக தாலசீமியா தினம்** (World Thalassemia Day) - மே 8

☞ **உலக வலசை போகும் பறவைகள் தினம்** (World Migratory Bird Day) - மே 8

☞ **உலக ரெட் கிராஸ் மற்றும் ரெட் கிரெசெண்ட் தினம்** (World Red Cross and Red Crescent Day) - மே 8

☞ **உலக தடகள தினம்** (World Athletics Day) - மே 7

☞ **சர்வதேச மருத்துவச்சிகள் தினம்** (International Day of the Midwife) - மே 5

☞ **உலக கை சுகாதார தினம்** (World Hand Hygiene Day) - மே 5

☞ **உலக ஆஸ்துமா தினம்** (World Asthma Day) - மே 5

☞ **சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம்** (International Firefighters Day) - மே 4



www.tnpscportal.in

- **உலக பத்திரிக்கை சுதந்திர தினம்** (World Press Freedom Day) - மே 3
- **உலக சிரிப்பு தினம்** (World Laughter Day) - மே 2
- **சர்வதேச தொழிலாளர் தினம்** (International Labour Day) - மே 1
- **சர்வதேச தொழிலாளர் தினம்** (International Workers' Day or Labour Day) - மே 1
- **உலக தடுப்பூசி வாரம் 2021** (World Immunization Week) - 24-30 ஏப்ரல் 2021

## அறிவியல் தொழில்நுட்பம்

- **வைபர் (VIPER) ரோவர்** : அமெரிக்காவின் நாசா ( National Aeronautics and Space Administration (NASA)) வைபர் (Volatiles Investigating Polar Exploration Rover (VIPER)) தனது முதலாவது நடமாடும் ரோபோ (mobile robot) ரோவரை 2023 ஆம் ஆண்டில் நிலவுக்கு அனுப்பவுள்ளதாக அறிவித்துள்ளது.

- **ஐந்தாம் தலைமுறை (5ஜி) இணையதள வசதியை உருவாக்கும் சோதனைக்கான அலைக்கற்றையைத் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ளது**.தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு 700 மெகா ஹெர்ட்ஸ், 3.3-3.6 ஜிகா ஹெர்ட்ஸ், 24.25-28.5 ஜிகா ஹெர்ட்ஸ் ஆகிய அலைநீளம் கொண்ட அலைக்கற்றைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் 5ஜி சோதனைகள் நடத்தப்படவுள்ளன.

இந்தியாவில் 5ஜி தொழில்நுட்பத்துக்கான சோதனைகளை மேற்கொள்வதற்கு மத்திய அரசு ஏற்கெனவே அனுமதி அளித்திருந்தது. இந்த ஆய்வுக்காக ரிலையன்ஸ் ஜியோ, பார்தி ஏர்டெல், வோடஃபோன் ஐடியா, எம்டிஎன்எல் ஆகிய நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சீன நிறுவனங்களுடன் இணைந்து இந்த சோதனையை மேற்கொள்ளாமல் எரிக்ஸன், நோக்கியா, சி-டாட் ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்ள மத்திய அரசு அனுமதி வழங்கியிருந்தது.

- **'இண்டர்நெட் எக்ஸ்புளோரர் 11' (Internet Explorer 11) browser - க்கான டெஸ்க்டாப் அப்ளிகேஷனுக்கான சாஃப்ட்வேர் உதவியை 15 ஜீன் 2022 டன் நிறுத்தவிருப்பதாக மைக்ரோசாஃப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.**

**கூ.தக.** : மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் 'இண்டர்நெட் எக்ஸ்புளோரர்' browser 1995 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

- **உலகின் மிகப்பெரிய மற்றும் மிக அதிக திறன் கொண்ட விண்வெளி அறிவியல் தொலைநோக்கியான 'ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியை' (James Webb Space Telescope) அமெரிக்கா தயாரித்துள்ளது**.

- **ப்ரீபென்ஸ் கோ கோவிட் பரிசோதனைக் கருவி** : மூச்சுக் காற்று மூலம் ஒருவருக்கு கரோனா தொற்று இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறியும் கருவிக்கு சிங்கப்பூர் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தக் கருவிக்கு 'பிரீபென்ஸ் கோ' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக்தைச் சேர்ந்த இந்தியப் பேராசிரியர் டி வெங்கி வெங்கடேசன், அவரின் மாணவர்கள் டாக்டர் ஜியா ஹூனன், டு ஃபாங், வேனே வீ ஆகியோர் இந்த கருவியை உருவாக்கியுள்ளனர்.

☞ **கருப்புப் பூஞ்சை நோயைக் குணப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் மருந்தின் பெயர் - ஆம்ஃபோடெரிசின்-பி**

☞ **மராட்டிய மாநிலம் புனேயை சேர்ந்த 16 வயது சிறுவன் பிராதமேஷ் ஜாஜூ நிலவை துல்லியமாக படமெடுத்து சாதனை படைத்து உள்ளான்.**

☞ **'ஹையாங் - 2டி' (Haiyang-2D (HY-2D)')** என்ற பெயரில் கடல் கண்காணிப்பு செயற்கைக்கோளை சீனா தனது லாங்க் மார்ச்-4பி (Long March-4B) ராக்கெட்டின் மூலம் விண்ணில் செலுத்தியுள்ளது.

☞ **'ஸ்பேஸ் எக்ஸ்' (SpaceX) நிறுவனத்தின் ஸ்டார்லிங் செயற்கைக்கோள்களின் (Starlink satellites) உதவியுடன் அதிவேக இணையதள சேவையை வழங்குவதற்காக கூகுள் கிளவுட் (Google Cloud) நிறுவனம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.**

☞ **'புளூ ஆரிஜின்' ( Blue Origin )** நிறுவனத்தின் முதலாவது விண்வெளி சுற்றுலா ஜீலை 2021 ல் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 'புளூ ஆரிஜின்' நிறுவனத்தின் உரிமையாளர் அமேஷான் நிறுவனத்தின் நிறுவனரான ஜெஃப் பெஷாஸ் (Jeff Bezos) என்பது குறிப்பிடத்தக்கது. இதற்காக 'New Shepard' எனும் ராக்கெட் பயன்படுத்தப்படுகிறது.

☞ **'சிப்ரிஸ் ஜியோ-5** ஏவுகணை அபாய கண்காணிப்பு செயற்கைக்கோள்' (SBIRS Geo-5 Missile Warning Satellite) அட்லச் - V (Atlas V) ராக்கெட்டின் மூலம் அமெரிக்காவினால் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.

☞ **"சிமோர்க்" ( Simorgh )** என்ற பெயரில் சூப்பர் கம்பியூட்டரை ஈரான் உருவாக்கியுள்ளது. சிமோர்க் எனப்படும் பீனிக்ஸ் பறவை போன்ற ஒரு பறவையின் பெயரில் இந்த சூப்பர் கம்பியூட்டர் பெயரிடப்பட்டுள்ளது. இதன் செயல் திறன் 0.56 petaflops ஆக உள்ளது.

☞ **'JUICE Mission'** என்ற பெயரில் வியாழன் ( Jupiter) கோளின் துணைக்கோள்களான யூரோபா (Europa) , கானிமெடி (Ganymede) மற்றும் காலிஸ்டோ (Callisto) ஆகியவற்றை ஆராய்வதற்கான விண்வெளி திட்டத்தை ஐரோப்பிய விண்வெளி கழகம் (European Space Agency) அறிவித்துள்ளது. ஜீன் 2022 ல் அனுப்பப்படவுள்ள இந்த விண்கலமானது அக்டோபர் 2029 ல் ஜீப்பிட்டர் கோளை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

☞ **'டால்க்கேட்டிவ் டைனோசர்' (Talkative Dinosaur)** அல்லது 'டிலாடோலோபஸ் கலோரம்' ( "Tlatolophus galorum") என்று பெயரிடப்பட்டுள்ள புதிய டைனோசர் இனத்தை மெக்சிகோவைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மேற்கு மெக்சிகோ பகுதியில் கண்டுபிடித்துள்ளனர்.

☞ **அதிவேக இணைய சேவைக்காக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் 52 செயற்கைக்கோள்களை பால்கான்-9 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தியது.**

☞ **"Ax-1" என்ற பெயரில் முதலாவது தனியார் விண்வெளி பயணத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா மற்றும் 'ஆக்சியாம் ஸ்பேஸ்' (Axiom Space) எனும் தனியார் நிறுவனம் ஆகியவை ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.**

☞ **பொதுமக்கள் வசிக்கும் பகுதியில் விழலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருந்த சீனாவின் லாங் மார்ச் 5பி ராக்கெட்டின் மிகப் பெரிய பாகம்**, இந்தியப் பெருங்கடலில் விழுந்தது.

☞ **சீனாவின் தியான்வென்-1 (Tianwen-1) விண்கலத்தின் லேண்டர் செவ்வாய் கிரகத்தில் 15-5-2021 அன்று தரையிறங்கி சாதனை படைத்தது.**

செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய 'தியான்வென்-1' என்ற விண்கலத்தை கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் லாங்மார்ச்-5 (Long March 5) ராக்கெட்டின் மூலம் சீனா விண்ணில் ஏவியது. இந்தத் திட்டத்துக்கு 'எப்படி இருக்க...' (சீன மொழியில் 'நி ஹவோ மா') என்று சீனா பெயர் சூட்டியுள்ளது. சீன விண்கலம் திட்டமிட்டபடி கடந்த பிப்ரவரி மாதம் செவ்வாய் கிரக சுற்று வட்டப் பாதையை அடைந்தது. இதன்மூலம் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக செவ்வாயில் ரோவரை தரையிறக்கிய 2-ஆவது நாடு என்கிற பெருமையை சீனா பெற்றுள்ளது. ஜுரோங் என்ற அந்த ரோவருடன் தியான்வென்-1 விண்கலம் கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூலையில் செலுத்தப்பட்டது. கடந்த பிப்ரவரி 2021 மாதம் செவ்வாயின் சுற்றுவட்டப் பாதைக்குள் விண்கலம் நுழைந்தது. இந்த நிலையில், விண்கலத்திலிருந்து பிரிந்த ஆய்வு வாகனம் பரந்த நிலப்பரப்பான 'உடோபியா பிளானிடியா' என்ற பகுதியில் தரையிறங்கியதாக சீன அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. 6 சக்கரங்களைக் கொண்ட 'ரோவர்' கருவியுடன் அனுப்பப்பட்ட இந்த விண்கலத்தின் மொத்த எடை 240 கிலோ ஆகும்.

